# களத்தில்

விடுதலை உணர்வே மனித ஆன்மாவின் சாரமாக – உயிர் மூச்சாக – இயங்கு கின்றது. மனித வரலாற்றை இயக்கும் மகத்தான சக்தியும் அதுவே.

- தமிழீழத் தேசியத் தலைவர்

திருவள்ளுவர் ஆண்டு 2028 (14.01.1998) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித் தாள் (152) அன்பளிப்பு: 60 p


# ஜெயசிக்குறுய் இறுதிக்கட்ட நடவடிக்கை 35,000 படையினருடன் ஆயத்தம்

## ✳ வன்னிக் களத்தில் சீனாவின் நவீன ஆயுதங்கள்
## ✳ சண்டை ஆரம்பிக்க முன்னரே புலிகள் அதிரடி

இம்மாத நடுப்பகுதியில் ஜெயசிக்குறுய் இராணுவ நடவடிக்கையின் இறுதிக்கட்ட தாக்குதலை ஆரம்பிப்பதற்கான ஆயத்தங்களில் சிறிலங்காப் படையினர் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். இதற்காக ஏற்கனவே நிறுத்தப்பட்டுள்ள 25,000 படையினருடன் மேலும் 10,000 படையினரை சிறிலங்கா அரசு ஜெயசிக்குறுய் களம் நோக்கி நகர்த்தியுள்ளது. அதேவேளை, இம்முறை எப்படியாவது பாதை திறப்பு முயற்சியை முடித்துவிட வேண்டுமெனும் நோக்கில் சீனாவில் இருந்து மிகநவீன ஆயுதங்களை சிறிலங்கா தருவித்துள்ளது. அவற்றைப் பரீட்சிக்கும் தளமாக வன்னிக் களம் அமையப் போகின்றதெனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கிடை சண்டை ஆரம்பமாவதற்கு முன்னரே ஒலுமடுவில், விடுதலைப் புலிகள் சிறிலங்காப் படைகளை கலங்க வைத்துள்ளனர். புத்தாண்டு தினத்தன்று விடுதலைப் புலிகள் ஒலுமடுவில் நிலைகொண்டுள்ள சிங்களப் படையணிமீது

தொடர்ச்சி 2 ம் பக்கம்...

# இந்தியப் பத்திரிகையாளர் வீடு சோதனை சிறிலங்கா இந்தியாவிடம் மன்னிப்பு

இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையின் நிருபர் நிருபமா சுப்பிரமணியத்தின் கொழும்பு வீட்டை திடீரெனச் சோதனையிட்ட சிறிலங்கா இராணுவத்தினர், அங்கிருந்த புகைப்படம் ஒன்றைக்காட்டி 'நீர் தமிழீழத்திற்குப் போய் வந்தீரா' எனக் கேட்டு எச்சரிப்பும் செய்தனர். இச்சம்பவம் தொடர்பாக இந்தியத் தூதுவர், சிறிலங்கா அரசாங்கத்திடம் ஆட்சேபம் தெரிவித்திருந்தார். நிருபமா சுப்பிரமணியம், தான் சர்வதேச பத்திரிகையாளர் எனக்கூறிய பின்னரே அவரது வீடு

தொடர்ச்சி 2 ம் பக்கம்...


# காலனித்துவ விலகலின் பின் தமிழர் பகுதிகள் முற்றாக புறக்கணிப்பு

"இலங்கைத் தீவில் காலனித்துவ விலகலின் பின் மேற்கொள்ளப்பட்ட 40 பாரிய பொருளாதார முயற்சிகளில் ஆறு மட்டுமே தமிழர் பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இவையும் விவசாயத் திட்டங்களாகவே இருந்தன. இந்த விவசாயத் திட்டங்களும் தமிழர்களுடைய பகுதிகளில் சிங்களக் குடியேற்றத்தை நடைமுறைப்படுத்தும் நோக்குடனேயே செயற்படுத்தப்பட்டன"

இவ்வாறு, அமெரிக்க பிலடெல்பியா பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. மிலிக்கா ஷார்கோவிக் வெளியிட்டுள்ள ஆய்வுக் கட்டுரை தெரிவிக்கின்றது.

அத்துடன் இவர், சிறிலங்காவின் அரசியலை 'சிங்கள பௌத்த' அரசியல் என வர்ணித்துள்ளார். இதற்குக் காரணமாக ஒரு நாட்டுக்குள்ளேயே தமிழர் பகுதிகள் வித்தியாசமான, வேறுபாடான முறையில் நடத்தப்படுவதைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

தமிழர்கள் மீதான சிறிலங்காவின் பொருளாதார ஒடுக்குமுறைகளை பிறிதொரு ஆய்வாளர் திரு. பௌல்ஸ் என்பவரும் தனதாய்வில் வெளிப்படுத்தியுள்ளார். இவ்வாய்வாளர்களின் கருத்துக்கள், கடந்த 50 ஆண்டு காலமாக இலங்கைத் தீவில் எத்தகைய விதத்தில் தமிழர்கள் நடாத்தப்பட்டனர் என்பதற்கான சர்வதேச மதிப்பீடாகவும் அமைகிறது.✳




# இன்பத் 'தை'யே வருக! இன்பத்தையே தருக!



எங்கும் துன்பம் நீங்க
எதிலும் இன்பம் நீள
பொங்கும் தையே வருக
புதுமை தன்னைத் தருக!

உழவரவர் வாழ்வில்
உலவும் துன்பம் நீங்க
அழகுத் தையே வருக
அமுதை அள்ளித் தருக!

அடிமை வாழ்வகன்று
அகதியின்றித் தாய்மண் சேர
தங்கத் தையே வருக
தமிழில் இன்பம் தருக!

புலம்பெயர்ந்த வாழ்வின்
பெருஞ்சுமைகள் குறைய
மலரும் தையே வருக!
மகிழ்ச்சி தன்னைத் தருக!

இலங்கைத் தீவில் எங்கள்
ஈழக்கொடி ஆட
இன்பத் 'தையே' வருக!
இன்பத்தையே தருக!

# வேட்பாளர் கரங்களில் ஆயுதங்கள் வாக்காளர் மனங்களில் இராணுவ ஆக்கிரமிப்பு

சமூக நீதியும் சனநாயக சுதந்திரங்களும் தளைத்தோங்கும் ஒரு உன்னத சமுதாயத்தைக் கட்டி எழுப்புவதே எமது அரசியல் இலட்சியமாகும்.

*-தமிழீழத் தேசியத் தலைவர்*

**யா**ழ் குடாநாட்டில் நடத்தப்படும் உள்ளூராட்சித் தேர்தலானது, ஜனநாயக மீட்புக்காகவும் தமிழ் மக்களை நிர்வாகத்தில் பங்கேற்க வைப்பதற்காகவும் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை என்பதே சந்திரிகா அரசாங்கத்தின் அறிவிப்பாகும். ஜனநாயகத்தின் மீட்பாளர்களாக தமிழ் குழுக்கள் காட்டப்படுகின்றனர். ஆனால் இதனைக் கொழும்பில் உள்ள பத்திரிகையாளர் சிலர் ஏற்றுக் கொண்டு கருத்து வெளியிட முன்வந்தமைதான் வேடிக்கையானது. யாழ் குடாநாட்டின் ஜனநாயக மீட்பு என்றால் என்ன? உள்ளூராட்சித் தேர்தலையோ, அன்றிப் பாராளுமன்றத் தேர்தலையோ நடத்தி முடித்து விட்டால் ஜனநாயகம் திரும்பிவிடுமா? உலக நாடுகளில் இருந்த பல சர்வாதிகாரிகளும் இராணுவ ஆட்சியாளர்களும் தமது நாடுகளில் பல தேர்தல்களையும் கருத்துக் கணிப்புக் களையும் நடத்தியே உள்ளனர். எதிர்க்கட்சிகளுக்கு தடைவிதித்து விட்டும் எதிர்த்தரப்பினரையும் எதிர்க்கட்சியினரையும் நாட்டைவிட்டு துரத்திவிட்டும் கொலை அச்சுறுத்தல் களை விடுத்த வண்ணம் இராணுவத் தினரின் அனுசரணையுடன் அத் தேர்தல்கள் அவர்களால் நடாத்தப்பட்டது.

இவ்வாறு நடத்தப்பட்ட தேர்தல்கள் எல்லாம் ஜனநாயகத்தை மீட்டெடுத் தனவா? அன்றி மக்களை ஆட்சியில் பங்கெடுக்கச் செய்தனவா? அன்றித் தேர்தலில் பங்கேற்றவர்களை மக்கள் பிரதிநிதிகள் ஆக்கிவிட்டனவா? அல்லது அதில் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதி கள்தான் மக்களின் தலைவர்களாகக் கருதப்பட்டார்களா? அவர்கள் உலகினால் ஏற்றுக் கொள்ளப்பட்டார்களா?

இவை ஒருபுறம் இருக்க, இலங்கையிலும் குறிப்பாக வடக்கிலும் கிழக்கிலும் ஜனநாயக மீட்புக்காக நடத்தப்பட்ட முதலாவது தேர்தல் அல்ல இது. இந்திய இராணுவமும் வடக்குக் கிழக்கில் இருந்தபோது மாகாணசபைத் தேர்தலும், பொதுத்தேர்தலும், 1994ல் சிறிலங்கா பாராளுமன்றத்திற்கான பொதுத்தேர்தலும் ஜனநாயக மீட்பு என்ற ரீதியிலேயே நடத்தப்பட்டன. ஆனால்

இன்று சிறிலங்கா இராணுவத்தின் ஆக்கிரமிப்பின் கீழ் ஆயுதம் தரித்த தமிழ்க் குழுக்கள் பங்கேற்கும் யாழ் குடாநாட்டுக்கான உள்ளூராட்சித் தேர்தல்கள் எந்த வகையில் ஜனநாயகத்தை மீட்டெடுக்க உதவும்? எவ்வாறு மக்களை நிர்வாகத்தில் பங்கேற்க வைக்கும்? இதனை எவ்வாறுதான் "ஜனநாயகத்தை மீட்பதற்கான தேர்தல்" என்று கூறமுடியும்?

அவை எவையும் ஜனநாயகத்தை மீட்டனவா? அன்றித் தமிழ் மக்களை ஆட்சியில் பங்கெடுக்கத்தான் வைத்தனவா? இந்திய இராணுவத்தின் அனுசரணையுடன் மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட்டபோது, அதில்

## இதுதான் ஜனநாயக மீட்பா?

ஆயுதம் தாங்கிய தமிழ்க் குழுக்கள் பங்கேற்றன. ஒருபுறம் தேர்தலில் வாக்களிக்குமாறு இந்திய இராணுவம் மக்களை நிர்ப்பந்தித்தபோது, இந்தியாவைச் சார்ந்த தமிழ்க் குழுக்கள் துப்பாக்கி முனையில் தேர்தல் மோசடிகளில் ஈடுபட்டன. அவையே மாகாண சபைத் தேர்தலில் வெற்றி பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது. அவ்வாறானால், ஜனநாயகம் மீட்கப் பட்டதா? அவ்வாறு ஜனநாயகம் மீட்கப்பட்டு அதில் மக்கள் பிரதிநிதிகளாக வந்தவர்கள் ஏன் இந்திய இராணுவத்துடன் வெளியேறினார்கள்? மக்கள் பலத்துடன் தமது தலைமையை நிலைநாட்ட ஏன் முற்படவில்லை? இதேபோன்று 1994ம் ஆண்டுத் தேர்தலிலும் ஜனநாயக மீட்பு மேற்கொள்ளப்பட்டதாயினும், அதன் வடிவம் வேறுவிதமாக இருந்தது. 1994இல் பல தமிழ்ப் பிரதேசங்களில் தேர்தல் வாக்களிப்பின்றியே பிரதிநிதிக தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களும் தங்களை அப்பிரதேச மக்களின் பிரதிநிதிகள் என்றே கூறிக்கொண்டனர் பாராளுமன்ற ஆசனத்தைப் பிடித்துக் கொண்டனர். தமது நிலையை நிறுத்திக்கொள்ள ஆட்சியாளர்களுக்கு

1994இல் பல தமிழ்ப் பிரதேசங்களில் தேர்தல் வாக்களிப்பின்றியே பிரதிநிதிகள் தேர்ந்தெடுக் கப்பட்டனர். அவர்களும் தங்களை அப்பிரதேச மக்களின் பிரதிநிதிகள் என்றே கூறிக்கொண்டனர். பாராளுமன்ற ஆசனத்தைப் பிடித்துக் கொண்டனர். தமது நிலையை நிறுத்திக்கொள்ள ஆட்சியாளர்களுக்கு இவர்களின் ஆதரவு தேவையாக இருந்தது.

இவர்களின் ஆதரவு தேவையாக இருந்தது அதனால் ஜனநாயக வாதிகளாகவும், மக்களின் தலைவர் களாகவும் ஆட்சியாளர்களினால் ஏற்றுக்கொள்ளப்பட்டனர். ஆனால் உண்மையில் இவையாவும் ஜனநாய கத்தை மீட்டெடுத்தனவா? அன்றி மக்கள் ஆட்சியில் பங்கேற்பதாக அர்த்தப் படுத்தியதா?

இந்த நிலையில், இன்று சிறிலங்கா இராணுவத்தின் ஆக்கிரமிப்பின் கீழ் ஆயுதம் தரித்த தமிழ்க் குழுக்கள் பங்கேற்கும் யாழ் குடாநாட்டுக்கான உள்ளூராட்சித் தேர்தல்கள் எந்த வகையில் ஜனநாயகத்தை மீட்டெடுக்க உதவும்? எவ்வாறு மக்களை நிர்வாகத்தில் பங்கேற்க வைக்கும்? இதனை எவ்வாறுதான் "ஜனநாயகத்தை மீட்பதற்கான தேர்தல்" என்று கூறமுடியும்? இதனை ஜனநாயகத்தை மீட்கும் செயல் எனக் கூறியவர்களும் ஏற்றுக்கொள்பவர்களும் எந்த அளவிற்கு ஜனநாயகவாதிகளாகவும் ஜனநாயகத்தைப் பற்றிப் புரிந்து கொள்பவர்களாகவும் இருக்க முடியும்? ✳

---

## ஜெயசிக்குறுய் இறுதிக்கட்ட நடவடிக்கை........

கடுமையான ஆட்டிலறித் தாக்குதலை நடாத்தி சிங்களப் படைகளுக்கு பலத்த இழப்பை ஏற்படுத்தினர். ஏழு இராணுவத்தினர் கொல்லப்பட்டு இருபது இராணுவத்தினர் படுகாயமடைந்துள்ளனர்.

மேலும், புத்தாண்டுக்கு மறுநாள் சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான ஆயிரம் மைல்கள் மட்டுமே பறந்திருந்த உலங்குவானூர்தியொன்று, மதியம் 1.30 மணியளவில் இராணுவ விநியோகப் பொருட்களை இறக்குகையில் கரும்புலி அணியொன்றின் ஊடுருவித் தாக்குதலினால் அழிக்கப்பட்டது. இந்த எம்.ஐ. 17 ரக ரஜ்ய உலங்குவானூர்தி பொன்விழாக் காட்சியில் பெப்ரவரி 4 இல் பவனிவர இருந்ததாகவும் இது அழிக்கப்பட்டு விட்டதனால் இன்னொரு உலங்கு வானூர்தியை வாங்கும் முயற்சியில் சிறிலங்கா விமானப்படை அதிகாரிகள் உக்கிரேன் நாட்டுக்குப் போயுள்ளதாகயும் செய்திகள் தெரிவிக்கின்றன.

விமானங்கள் தாக்கியழிக்கப்படுவதினாலும் விடுதலைப் புலிகளின் ஆட்டிலறித் தாக்குதல்கள் இலக்குப் பிழையாமல் தொடர்வதாலும் ஜெயசுக்குறுய் படையினர் தாக்குதலை ஆரம்பிக்கும் மனவலிமை அற்றவர்களாக உள்ளனர். இதனை ஈடுசெய்யும் வகையில் பெருந்தொகையான ஆளணியினரையும் நவீன ஆயுதங்க ளையும் ஜெயசுக்குறுய் முன்னரங்க் நிலைகள் நோக்கி சிறிலங்கா நகர்த்தி விடுகிறது. ஆயினும், எத்தகைய நிலைகளையும் சமாளித்து ஜெயசுக்குறுய் நடவடிக்கையை முறியடிப்பதற்கான சகல ஆயத்தங்களிலும் விடுதலைப் புலிகள் ஈடுபட்டுள்ளனர்.

இருந்த போதிலும் இராணுவத் தீர்வையே இனப்பிரச்சினைக்கான தீர்வாக முன்வைக்கும் சிறிலங்கா அரசாங்கம், எப்பாடு பட்டாவது பாதையைத் திறப்பதற்கான யுத்தம் என்ற பெயரில் இந்த ஜெயசுக்குறுய் இராணுவ நடவடிக்கையை முன்னெடுத்து தமிழீழ மக்களையும் தமிழீழ தேசத்தையும் அழிப்பதற்குக் கங்கணம் கட்டி நிற்கிறது.

ஆனால், பொன்விழாவிற்கு முன் அதாவது பெப்ரவரி 4க்கு முன், பாதை திறக்கப் போவதாக வீரவசனம் பேசிய சிறிலங்காப் பாதுகாப்புப் பிரதியமைச்சர் ரத்வத்த, வழமைபோல் அதனைச் சிங்களப் புத்தாண்டு வரை கால நீடிப்புச் செய்துள்ளதாகவும் தெரிகிறது. ✳

## இந்தியப் பத்திரிகையாளர் ............

சோதனைக்குட்பட்டமை குறிப்பிடத்தக்கது. ஆனால், இந்தியாவின் ஆட்சேபத்தினால் அதிர்ந்து போன சிறிலங்காவின் தகவல் தொடர்பு அமைச்சர் மங்கள சமரவீர, இந்தியச் செய்தியாளரின் வீடு தற்செயலாகவே சோதனையிடப்பட்டதாகவும் அவரது வீட்டைச் சோதனையிடும்படி மேலிட உத்தரவு எதுவும் வழங்கப்படவில்லை எனவும் புதிய சாட்டு ஒன்றைக் கூறி, இச்சம்பவத்திற்கு மன்னிப்புக் கோரியுள்ளார்.

ஆனால், மேலிடத்து உத்தரவு இன்றி சிறிலங்கா இராணுவம் செயற்படுகிறது என்பது நம்பமுடியாதது. ஒவ்வொரு முறையும் சிறிலங்கா இராணுவத்தின் அத்துமீறல்கள் இடம்பெறும் பொழுதும் சிறிலங்கா இவ்வாறே தனது உத்தரவு இன்றி அவர்கள் செயற்பட்டதாக பொறுப்பில் இருந்து தப்பித்துக் கொள்ள விழைவது வழமை. ஆனால் நிருபமா சுப்பிரமணியம் மட்டுமல்ல, வேறு இரு இந்தியச் செய்தியாளர்களும் சிறிலங்காப் படையினரால் சோதனைக்கும் தொல்லைக்கும் உள்ளானமை குறிப்பிடத்தக்கது.

இதற்கிடை வெலிகந்தைப் பகுதியில் இராணுவச் சோதனைச்சாவடி இராணுவத்தினர் சுட்டதில் சுவீடன் நாட்டுப் பிரஜை ஒருவர் காயமடைந்துள்ளார். இந்த உல்லாசப்பயணி காயமடைந்துள்ளமை, சர்வதேச உல்லாச பயணிகள் இடையே, சிறிலங்காவுக்கு விஜயம் செய்வது குறித்து உள்ள அச்சத்தை மேலும் அதிகரிக்க வைக்குமென கொழும்பு உல்லாசப்பயணிகள் துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அத்துடன், கட்டுநாயக்கா சர்வதேச விமானத்தளத்தில் விமானப்படையினரை பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தியுள்ளமை சிறிலங்காவில் யுத்தநிலமைகள் மேலும் மோசமடைவதை எடுத்துக்காட்டி விட்டதெனவும் இதனால் சர்வதேசப் பயணிகளும் சர்வதேச வர்த்தகர்களும் சிறிலங்காவுடன் தொடர்புகளை மேற் கொள்வது மேலும் மந்தமடையலாம் எனவும் பொருளாதார ஆய்வாளர்கள் எதிர்பார்க் கின்றனர்.

அதேவேளை, தேயிலைத்தோட்டப் பகுதிகளிலும் யுத்தம் விரிவடைந்துள்ளதாகக் கிலி கொண்டுள்ள சிறிலங்கா, தேயிலைத் தோட்டப் பகுதிகளிலும் படையினரின் தொகையை அதிகரித்துள்ளது. மலையக மக்களும் தமிழர்களாய் இருப்பதினால் அவர்கள் மீது சிறிலங்கா கொண்டு வரும் பலத்த சந்தேகங்களின் எதிரொலியே இதுவெனக் கூறப்படுகிறது. இதனால், மலையகத் தமிழ்த் தொழிலாளர்களின் உடலுக்கும் உயிருக்கும் உடமைகளுக்கும் இனங்காணக்கூடிய அச்சம் வளர்ச்சியடைந்து வருகிறது. ✳



# செயற்பட எழுவோம்!

1998 ஆம் ஆண்டு மலர்கிறது. புத்தாண்டை வருகவென வாய் வரவேற்கும் அதே நேரம், எம் உயிரிலும் மேலான தமிழீழ தேசத்தையும் மக்களையும் திரும்பிப் பார்க்கிறோம்.

சேவல் கூவத் துயில் எழுந்து, ஆலய மணிகளின் நாத ஓசையில் செயற்படத் தொடங்கி அன்பும் பண்பும் பெருக்கிய ஈழமண் எங்கள் தாய்மண். இன்று இராணுவ வாகனங்களினால் கீறிக் கிழிக்கப்பட்டு, குண்டுகளாலும் எறிகணைகளாலும் சிதைக்கப்பட்டு குண்டும் குழியுமாகக் காட்சி அளிக்கிறது நாம் பிறந்த மண். தமிழர்கள் கும்பிட்டு விட்டார்கள் என்ற குற்றத்திற்காக கோவில்களினதும் தேவாலயங்களினதும் உச்சியிலும் குண்டுகள் கொட்டப்பட்டு அவையும் சிதைந்து சின்னாபின்னமாகக் காட்சி அளிக்கின்றன. தமிழர்களுடைய பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள், வீடுகள், வர்த்தக நிலையங்கள் எல்லாமே சன்னங்களால் சல்லடை போட்டு துளைக்கப்பட்டுள்ளன. இந்தப் பூமியிலே எந்த நேரமும் சிங்களப் படை வடிவில் எமன் வருவான் என்ற ஏக்கத்துடன் மக்கள் உயிர் தாங்கி நிற்கின்றனர். அந்த உயிரைக் கூட தாங்கும் வலிமையற்ற உடல்களாக மருத்துவத் தடைகள், உணவுத் தடைகளால் அவர்கள் உடல்கள் தள்ளாடுகின்றன. சின்னக்குழந்தை முதல் பள்ளிச் சிறுவர்கள் வரை சத்துணவு இன்றி சந்ததியே சாகடிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. சிங்களக்காடைப்படை மிருகத்தனமாக, பள்ளி மாணவிகளை பருவமடையாத பிஞ்சுக்குழந்தைகளைக்கூட பாலியல் வன்முறைகளுக்கும் இனக்கொலைகளுக்கும் உள்ளாக்கிக் கொண்டிருக்கின்றது. கொடுமையிலும் கொடுமையாக, தம் குழந்தைகளுக்கு பால் ஊட்டிய குற்றத்திற்காக எங்கள் தமிழ் தாய்மாரின் மார்புகளைக் கூட வெட்டி எடுத்து, காட்சிக்கு வைத்து எங்கள் தன் மானத்திற்கே சவால் விட்டுக் கொண்டிருக்கிறது சந்திரிகா படை. ஆனால் அம்மையார் கூறுகிறார் யாழ்ப்பாணத்தில் நிலைமை வழமை என்று.

அங்கு மட்டுமா? வன்னியைப் பாருங்கள். வன்னியில் வாழும் மக்களுக்கு உணவும் மருந்தும் கல்வியும் தொழிலும் மறுக்கும் சிறிலங்கா அந்த மக்களைச் சுற்றிவர இராணுவ முற்றுகைகளை முடுக்கி விட்டு அவர்கள் உயிருக்கும் உடலுக்கும் அச்சத்தை விளைவித்துக் கொண்டிருக்கிறது. மன்னார், கிளிநொச்சியிலும் அதே அவலக்கதை.

தென் தமிழீழத்திலோ நிலைமை தலை கீழ். தென் தமிழீழத்தின் பெரும்பாலான பகுதிகள் யாழ்குடா நாட்டு ஆக்கிரமிப்பை அடுத்து விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டு விட்டன. இதனால் தென் தமிழீழத்தின் உள்ளே செல்முடியாத சிறிலங்காப் படைகள், நகரங்களில் முகாமிட்டு பொது மக்களை வதைத்துக் கொண்டிருக்கின்றன. வீட்டு மதில்கள், வேலிகள் எல்லாம் இடிக்கப்பட்டமையினால் குளிப்பதற்குக் கூட மறைவிடம் இன்றி மக்கள் பரிதவிக்கின்றனர். அத்துடன், சந்திரிகாவின் படைகள் தமிழர்களை இன அழிப்புச் செய்தும் துன்புறுத்தியும் அவர்களின் அரசியல் பணிவை ஆயுத முனையில் பெறமுயன்று கொண்டிருக்கிறது.

இதேவேளை, வடதமிழீழத்திலும் தென் தமிழீழத்திலும் விடுதலைப் புலிகளின் வெற்றித் தாக்குதல்களும் தொடர்கின்றன. இதனால் சிங்களப்படை இதுவரை காணாத உயிரிழப்பினை அடைந்து வருவதுடன், விடுதலைப் புலிகளுக்கு ஆயுதபலத்தையும் ஏற்படுத்தி வருகிறது. நேற்று தரை, பின்னர் கடல், இன்று வான் என்ற முறையில் முப்படைகளின் செயற்பாடுகளும் கணிசமான அளவில் விடுதலைப் புலிகளால் முடக்கப்பட்டுள்ளன.

இதனால் வெகுண்டு போய் உள்ள சந்திரிகா அரசு, விடுதலைப் போராட்டத்துக்கு சர்வதேச நெருக்கடிகளைக் கொடுக்கக்கூடிய பொய்யான பரப்புரைகளைச் செய்வதுடன் அந்நிய முதலீடு, சந்தைவாய்ப்பு, துறைமுக அபிவிருத்தி, இராணுவ சலுகைகள் என்பவற்றின் ஊடாக சர்வதேச அரசியல் அழுத்தங்களையும் தமிழர்கள் மீது செலுத்த தனது முழுச்சக்தியையும் பயன்படுத்தி வருகின்றது.

சந்திரிகா அரசின் பொய் முகத்தை சர்வதேச சமூகத்தின் முன் தோலுரித்துக் காட்டுவதுடன், சிறிலங்காவின் தமிழர்கள் மீதான ஐம்பதாண்டு கால அடக்குமுறைக் கொடூரங்களையும் அம்பலப்படுத்த வேண்டிய பெரும் வரலாற்றுப் பணியொன்றை நாம் எதிர்நோக்கியுள்ளோம்.

1948 பெப்ரவரி 4இல் இலங்கைக்குக் கிடைத்த சுதந்திரத்தை, எதிர்வரும் பெப்ரவரி 4இல் சர்வதேச சமூகத்திற்கும் அழைப்பனுப்பி கேளிக்கைகளுடன் பொன்விழாவாகக் கொண்டாட சிறிலங்கா அரசு ஆயத்தமாகி வருகின்றது. தனது ஐம்பதாண்டு கால இனவழிப்புக்களையும் அடக்குமுறைகளையும் தமிழர்களின் தேசிய சுதந்திர உணர்வுகளையும் சுதந்திர பொன்விழாக் கேளிக்கைகளுக்குள் மறைக்க முயற்சிக்கும் சிறிலங்காவின் கபடத்தனத்தை சர்வதேசத்தில் அம்பலப்படுத்த, தாய் மண்ணில் வாழும் எம் உடன்பிறப்புக்களால் முடியாது. புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களால் மட்டுமே இவ்வரிய வரலாற்றுக் கடமையைச் செய்ய முடியும். இதை உணர்ந்து, இது தொடர்பாக எம்மக்களால் மேற்கொள்ளப்படும் சகல நிகழ்ச்சிகளிலும் தவறாது பங்கெடுத்து தமிழ்த் தேசியத்தின் பலத்தை, தன்மானஉணர்வை சர்வதேசத்திற்கு மட்டுமல்ல சிங்களப் பேரின அரசிற்கும் புரியவைக்க உறுதி கொள்வோம். இதன் முதல் அடியாக, பெப்ரவரி 1ஆம் திகதி இலண்டனில் நடக்கவுள்ள பேரணியில் பெருவெள்ளமாய் திரள்வோம். இலண்டனில் கூடும் தமிழரணியின் எதிரொலியால், தமிழீழத் தேசியப் போராட்டத்தை அங்கீகரிக்கும் முதல்நாடு பிரித்தானியாவே என அமையட்டும். பிரித்தானியாவின் காலனித்துவ ஆட்சியின் போது பெற்ற சுதந்திரத்தைத் தமது கையில் எடுத்தே, மாறிமாறி ஆட்சிக்கு வந்த சிறிலங்கா அரசுகள் தமிழின அழிப்புக்கும் அடக்குமுறைக் கொடூரங்களுக்கும் பயன்படுத்தியுள்ளன. இதனால் எமது நியாயமான, நீதியான தேசிய விடுதலைப் போராட்டத்தை அங்கீகரிப்பது பிரித்தானிய அரசின் தார்மீகக் கடமையாகும். கடும் குளிரும் வேலைப்பளுவும் பேரணியில் திரள யாருக்கும் தடையாக இருக்கக் கூடாது. இத்தகைய எல்லாத் தடைகளையும் தாண்டி, லண்டனில் நடைபெறவுள்ள எழுச்சிப் பேரணியில் ஒன்றிணைவோம். நம் கையில்தான், எம்மக்களின் எதிர்காலம் தங்கியுள்ளது. எம்பலத்தில்தான், நம்மக்களின் சுதந்திர பொன்வாழ்வும் தங்கியுள்ளது. 1998தான் தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தில் பெரும் திருப்புமுனையாக அமையவுள்ளது. இதை நல்ல முறையில் பயன்படுத்தி, எமது மக்களுக்கு பாதுகாப்பான அமைதியான வாழ்வு மலர உழைப்போமென உறுதி பூண்டு செயற்பட எழுவோம். ✳

## தமிழீழ விடுதலைப் புலிகள்
## Liberation Tigers of Tamil Eelam

12.01.1998

அன்பான தமிழீழ மக்களே!

### வரலாற்றுக் கடமையை செவ்வனவே செய்வோம்

மூன்றாம் ஈழப்போர் ஆரம்பித்து 2 1/2 ஆண்டுகள் கழிந்து விட்டது. புதிய ஆண்டில் காலடியெடுத்து வைத்துள்ளோம். சிங்கள இனவாத ஆட்சி முறையில் மிகவும் கொடிய தலைமையை எதிர்கொண்டுள்ள நாம், இவ் கொடிய எதிரியை தோற்கடித்து எவ்வாறு விடுதலையை வென்று கொள்ளப்போகின்றோம் என்பதை எமது எதிர்காலச் செயற்பாடுகள் தான் தீர்மானிக்கும்.

இராணுவ அடக்கு முறையை பாரிய படை பலத்துடனும் கொடுமையான முறையிலும் தமிழ் மக்களுக்கு எதிராக செயற்படுத்தும் சந்திரிகா தலைமையிலான சிங்கள அரசு சர்வதேச ரீதியிலும் தனது செயற்பாடுகளை தீவிரப்படுத்தியுள்ளதை நடைமுறையில் எதிர்கொண்டு வருகின்றோம். வெற்றியை விரைவாக்கிக் கொள்ள பாரிய சிங்கள படையெடுப்புக்கெதிராக அதைத் தோற்கடிக்க, நாமும் பாரிய இராணுவ அணியை திரட்டி, நவீனமயப்படுத்தி அவர்களை எமது மண்ணில் இருந்து விரட்டியடிப்பதன் மூலம் எம்து உயிர்களுக்கும், உடமைகளுக்கும், தாயகத்திற்குமான பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். தமிழ் மக்களையும், தமிழ் மண்ணையும் எக்காலத்திலும் நாமே பாதுகாக்கும் நிலையை உருவாக்க உறுதிகொள்வோம். எத்தகைய இடர் வரினும் அவற்றையெல்லாம் முறியடித்து எமது படையணிக்கு தேவையான ஆட்பலத்தையும் நவீனமயப்படுத்த தேவையான பணபலத்தையும் மூளை வளத்தையும் நாமே வழங்குவோம். புலம்பெயர்ந்து வாழும் ஒவ்வொரு தமிழ் குடிமகனும் தனது உழைப்பின் ஒரு பகுதியை தன் தாய் நாட்டின் பாதுகாப்பிற்கு வழங்க முன்வர வேண்டும்.

விடுதலைப் புலிகளின் பலம் தான் தமிழீழ மக்களின் அரசியல் உரிமையை நிர்ணயிக்கும் சக்தியின் அளவு. எந்த அளவுக்கு நாம் ராணுவ பலம் உடையவர்களாக இருக்கின்றோமோ அந்த அளவு அரசியல் உரிமையுடையவர்களாக இருப்போம். 1998ம் ஆண்டில் தமிழீழ படைபலம் இன்னும் பலமடைய தேவையான நிதியை வழங்க வேண்டியது புலம்பெயர்ந்த தமிழர்களின் தேசிய வரலாற்றுக் கடமையாகின்றது. ஒவ்வொருவரும் தன் தாயை நினைக்கும் போது தாய்மண்ணை நினைக்க வேண்டும். வெளிநாடுகளில் சந்திரிகா அரசின் பொய்ப்பிரச்சாரங்களையும் தமிழ் மக்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்களையும் எடுத்துக்காட்ட புலம்பெயர்ந்து வாழும் அனைத்து தமிழீழ மக்களும் பெருமளவில் அணிதிரண்டு குரலெழுப்ப வேண்டியவரலாற்றுக் கடமையுடையவர்களாவர். இது எமது வரலாற்றுக் கடமை. எமது வரலாற்றை நாமே நிர்ணயிப்போம்.

"புலிகளின் தாகம் தமிழீழ தாயகம்"

அனைத்துலகச் செயலகம்.

## வாசகர் கவனத்திற்கு !

இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ள இப்படத்திற்கு பொருந்தக்கூடிய வகையில் எட்டுவரிகளுக்கு மேற்படாமல் கவிதை வரையுங்கள். உங்கள் ஆக்கங்களை 13- 02 - 1998 இற்கு முன்பாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறு கீழ்தரப்பட்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.



கவிதை அனுப்ப வேண்டிய முகவரி:

**'Kalathil',**

**Eelam House, 202Long Lane, London SE1 4QB.**

# நிகழ்கால அரசியல் யதார்த்தத்தை மறக்கும் சிங்கள அரசுகள்

"உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடான இந்தியா கட்டுக்குலையாமல் இருப்பதற்கு பாரிய அளவில் அதிகாரத்தைப் பன்முகப்படுத்துவது அவசியம்" என முன்னாள் இந்தியப் பிரதமரும் அடுத்த பிரதமராகப் பெரும்பாலும் வரலாம் என எதிர்பார்க்கப்படுபவருமான பாரதிய ஜனதாக் கட்சியின் தலைவர்களில் ஒருவரான வாஜ்பாய் தெரிவித்துள்ளார். இவரின் இவ் அறிவிப்பானது, ஏதோ தேர்தலில் வாக்கு வங்கியைப் பெருக்கிக் கொள்வதற்கான ஓர் அரசியல் 'ஸ்டன்ட்' ஆக ஒரு போதுமே இருக்க வாய்ப்பில்லை. ஏனெனில், தேர்தலில் முக்கியமான ஒரு பிரச்சினையாக இது முன்வைக்கப்படவில்லை. இந்தியாவில் சமஷ்டி முறைமிலான அரசியல் யாப்பு முறை நடைமுறையில் இருப்பதாகக் கூறப் பட்டாலும், மாநிலங்களுக்கான அதிகாரங்கள் மிகவும் குறைவாகவும் மத்திய அரசிடமே, அதிகாரங்கள் குவிந்து போயுள்ளதாகவும் இருக்கின்றன. இதனால் இந்திய யாப்பு முறையானது, ஒரு அரைகுறை சமஷ்டி முறையாகவே கொள்ளப்படுவதுண்டு. இதன் காரணமாக மத்திய – மாநில அரசுகளுக்கு இடையில் பிணக்குகளும் முரண்பாடுகளும் அடிக்கடி ஏற்படுவதுண்டு. இந்நிலையானது மாநில – மத்திய அரசுகளுக்கு இடையே உள்ள முரண்பாடாக மட்டுமல்ல, இந்தியாவின் தேசிய இன போராட்டங்கள் முனைப்புப் பெறவும் பிரிவினைவாதக் கோரிக்கைகள் வலுவடையவும் காரணங்களாக இருந்துள்ளன. இதன் பரிநாமமானது இந்திய தேசத்தைச் சிதைத்து விடுமோ என்ற கேள்வியையும் சில சமயங்களில் தோற்றுவிப்பதாக இருந்துள்ளன. இந்த நிலையில்தான், மாநிலங்களுக்கு அதிகாரங்களைப் பரவலாக்குவது என்பது இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கும் ஐக்கியத்துக்கும் தேவையானது மட்டுமல்ல, பொருளாதார அபிவிருத்தி தொடர்பான விடயங்களுக்கும் அவசிய தேவையாக உள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டே திரு. வாஜ்பாய் அதிகாரப் பரவலாக்கலின் அவசியத்தைப் பற்றிப் பேசியுள்ளார். ஆனால், இது இந்தியாவில் மட்டும் நோக்கப்படும் விடயமாகவோ அன்றி, திரு. வாஜ்பாய்தான் அரசியல் முறை சீர்திருத்தம் பற்றிப் பேசும் முதல் உலக அரசியல் தலைவரோ அல்ல. ஏனெனில், இன்று பிராந்தியங்களுக்கான அதிகாரப் பரவலாக்கல் மூலமே தேசிய நலன்களைப் பேண முடியும் என்பதை ஜனநாயக நாடுகள் ஏற்கனவே கண்டுகொண்டுள்ளன. அதற்கு சொல் வடிவமும் கொடுக்கத் தொடங்கியுள்ளன.

> சிறிலங்கா அரசாங்கமோ இன்றைய உலக நடப்பிற்கு மாறாக, அதிகாரப் பரவலாக்கல் என்பது நாட்டைப் பிரிவினைக்கு உள்ளாக்கும் என்ற முரண்பாடான சிந்தனை கொண்டதாக இருப்பதுடன், தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கு எதிராக அரச பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்தும் விட்டுள்ளது. ஆனால், இதன் முடிவு நிச்சயமாக சிங்கள அரசு எதிர்பார்ப்பதற்கு மாறாகவே அமையும்.

இந்த வகையில் ஜனநாயகத்தின் தாய்வீடு எனக் கூறப்படும் பிரிட்டனில் கூட, சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுவிட்டன. பழமைவாதக் கட்சியான கன்சர்வேட்டிவ் கட்சியிடமிருந்து ஆட்சி அதிகாரத்தைப் பெற்ற பிரதமர் டொனி பிளேயர் தலைமையிலான தொழிற்கட்சி, பிரிட்டனின் ஓர் அங்கமாக உள்ள ஸ்கொட்லாந்துக்கு பாராளுமன்றம் ஒன்றை அமைக்கும் அனுமதியை வழங்கியுள்ளது. அதேவேளை, வேல்ஸ் பிராந்தியத்துக்கு சட்டமன்றம் ஒன்றை அமைப்பதற்கான அனுமதியையும் அது வழங்க உள்ளது. இதேபோன்று கனடாவில், குவிபெக் மாநிலத்தின் சுயாட்சி பற்றி தீவிரமாகவே பேசப்பட்டு வருகின்றது. மீண்டும் ஒரு கருத்துக் கணிப்பை குவிபெக்கில் நடத்தி, அதன் சுயாட்சி பற்றி நடவடிக்கைகள் மேற்கொள்ள கனடா அரசாங்கம் முற்பட்டுள்ளது. இத்தனைக்கும் பிரிட்டனிலோ அல்லது கனடாவிலோ நடத்தப்படும் கருத்துக் கணிப்புக்கள் யாவும் தமது உரிமைகளைக் கோரும் இனங்களிடமே மேற்கொள்ளப்படுகின்றன. இதேசமயம் பொதுத் தேர்தல்களின் போது, இவ்வாறன சீர்திருத்தங்களுக்கு மக்களின் அங்கீகாரத்தை தேசியக் கட்சிகள் மக்களிடம் பெற்றுக் கொள்கின்றன. இந்த வகையில் திரு. வாஜ்பாயின் அறிவிப்பானது, இன்றைய ஜனநாயக நாடுகளில் ஏற்பட்டுள்ள பொதுவான ஒரு போக்கேயாகும். இதுவே ஜன நாயகத்தையும், தேசங்களையும் இன்றைய தேசிய எல்லைகளுடன் பாதுகாக்க உதவும் என அவை கருதுகின்றன. இதற்கு, கம்யூனிஸ உலக நாடுகள் சிதறுண்டு போனமை அவர்களுக்குப் படிப்பினையாக இருக்கலாம். ஆனால்,

> ஜனநாயகத்தின் தாய்வீடு எனக் கூறப்படும் பிரிட்டனில் கூட, சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுவிட்டன. பழமைவாதக் கட்சியான கன்சர்வேட்டிவ் கட்சியிடமிருந்து ஆட்சி அதிகாரத்தைப் பெற்ற பிரதமர் டொனி பிளேயர் தலைமையிலான தொழிற்கட்சி, பிரிட்டனின் ஓர் அங்கமாக உள்ள ஸ்கொட்லாந்துக்கு பாராளுமன்றம் ஒன்றை அமைக்கும் அனுமதியை வழங்கியுள்ளது. அதேவேளை, வேல்ஸ் பிராந்தியத்துக்கு சட்டமன்றம் ஒன்றை அமைப்பதற்கான அனுமதியையும் அது வழங்க உள்ளது. இதேபோன்று கனடாவில், குவிபெக் மாநிலத்தின் சுயாட்சி பற்றி தீவிரமாகவே பேசப்பட்டு வருகின்றது.

சிறிலங்கா அரசாங்கமோ இன்றைய உலக நடப்பிற்கு மாறாக, அதிகாரப் பரவலாக்கல் என்பது நாட்டைப் பிரிவினைக்கு உள்ளாக்கும் என்ற முரண்பாடான சிந்தனை கொண்டதாக இருப்பதுடன், தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கு எதிராக அரச பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்தும் விட்டுள்ளது. ஆனால், இதன் முடிவு நிச்சயமாக சிங்கள அரசு எதிர்பார்ப்பதற்கு மாறாகவே அமையும். ஏனெனில், நிகழ்கால அரசியல் யதார்த்தத்தை மறப்பவர்கள், கடந்தகால வரலாற்றுப் படிப்பினையைப் பெற்றே ஆகவேண்டும். ✳

# ஜனநாயகம்-சமாதானம் என்ற போர்வைக்குள் மறைக்கப்படும் அபத்தங்களும் அவலங்களும்

யாழ் குடாநாட்டில், எவ்வாறான இராணுவ அழுத்தத்தினுள் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெற உள்ளன என்பதற்கான சமிக்ஞைகள் ஏற்கனவே தென்படத் தொடங்கிவிட்டன. இதன் இறுதி வெளிப்பாடாக சாவகச்சேரி மட்டுவில் பகுதியில் தேர்தல் பிரச்சார சுவரொட்டி ஒன்றைப் பார்வையிட்டுக் கொண்டிருந்த அப்பாவித் தமிழ் இளைஞர் ஒருவர், இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். சுட்டுக் கொல்லப்பட்டவர் சுவரொட்டியைக் கிழித்துக் கொண்டிருந்த போதே சுடப்பட்டார் என்று இராணுவத் தரப்பு தெரிவித்த போதிலும், அவர் அதைப் பார்த்துக் கொண்டிருக்கும் போதே சுடப்பட்டதாக இளைஞரின் உறவினர் உறுதி செய்துள்ளனர். சிறிலங்கா இராணுவத்தினருக்கு, தமிழ் இளைஞர் எவரையும் சுட்டுக்கொல்ல காரணம் எதுவும் தேவையில்லை. தமிழ் இளைஞர் என்ற ஒன்றே அதற்குப் போதுமான தகுதியாகும். ஆகையினால், சிங்கள இராணுவத்தினர் இளைஞரைச் சுட்டுக் கொன்றமைக்குத் தாம் விரும்பிய காரணம் எதையும் கூறிக் கொள்ளலாம். இது குறித்து கேள்வி, விசாரணைகள் எவையும் எழும்பமாட்டாது. அவ்வாறு இல்லாது விடினும் இராணுவம் கூறுவது போல், அவர் சுவரொட்டியைக் கிழித்துக் கொண்டிருப்பினும் கூட இராணுவம் அவரைக் கைது செய்யவே முனைந்து இருக்க வேண்டும். ஆனால், சுட்டுக் கொல்லப்பட்டவர் கைக்குண்டு ஒன்றை வைத்திருந்தார் எனக் கூறுவது, தாம் புரிந்த கொலைக்குக் காரணமேயொழிய வேறில்லை. ஏனெனில், கைக்குண்டு வைத்திருந்தவர் தாக்குதல் எதையும் நடத்தியதாகக் கூட இராணுவத் தரப்பினர் கூறவில்லை. தமிழர்களைக் கொன்றொழிப்பதற்கான அதிகாரம் முன் அனுமதியாகவே ஏற்கனவே அரசாங்கத்தினால் இராணுவத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

> உலகில் வேறு எங்கும் இல்லாது போன்று சிறிலங்கா அரசினால்தான் ஜனநாயகத்தைப் பாதுகாக்க படுகொலைகளும் சமாதானத்தை நிலைநிறுத்த யுத்தமும் நடத்தப்படுகின்றது. யாழ்குடாநாட்டில் உள்ளூராட்சித் தேர்தல் அறிவிக்கப் பட்டபோதே, இத் தேர்தல் இரத்தக்களறியை ஏற்படுத்தும் என அரசியல் அவதானிகளினால் எச்சரிக்கப்பட்டு இருந்தது. ஆனால், இதனை சந்திரிகா அரசாங்கம் பொருட்படுத்தவில்லை.

அதிலும், குறிப்பாக உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு இவ் அதிகாரம் மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் தேர்தலுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டனர் எனக் கூறி எவரையுமே இராணுவம் சுட்டுக்கொல்லவோ, கைது செய்து சித்திரவதை செய்யவோ முடியும். இந்த வகையில் ஏற்கனவே சுற்றி வளைப்புக்களும் தேடுதல்களும் கைதுகளும் இடம்பெறத் தொடங்கிவிட்டன. தற்போது இதுகாரணமாக முதற்கொலையும் இடம் பெற்று விட்டது. ஆனால், இவ்வாறான நிகழ்வுகள் இடம்பெறும் என்பது எதிர்பார்க்கப்பட்ட தொன்றுதான். ஏனெனில், உலகில் வேறு எங்கும் இல்லாது போன்று சிறிலங்கா அரசினால்தான் ஜனநாயகத்தைப் பாதுகாக்க படுகொலைகளும் சமாதானத்தை நிலைநிறுத்த யுத்தமும் நடத்தப்படுகின்றது. யாழ்குடாநாட்டில் உள்ளூராட்சித் தேர்தல் அறிவிக்கப்பட்டபோதே, இத் தேர்தல் இரத்தக்களறியை ஏற்படுத்தும் என அரசியல் அவதானிகளினால் எச்சரிக்கப்பட்டு இருந்தது. ஆனால், இதனை சந்திரிகா அரசாங்கம் பொருட்படுத்தவில்லை.எவ்வாறாயினும் தேர்தலை நடத்துவது என்றே அது குறியாக இருந்தது. இதற்கு தமிழர் தரப்பில் இரத்தம் சிந்தப்படுவதை அது ஒரு பொருட்டான விடயமாகக் கருதாமையே காரணமாகும். ஆனால், இத்தேர்தல் நடாத்தப்பட்டால் தமிழர் மீது இராணுவ அழுத்தம் தீவிரமாகும் கெடுபிடிகள், இன்னல்கள் அதிகரிக்கும் என்பதும் இத் தேர்தலில் போட்டியிட முன்வந்துள்ள தமிழ் குழுக்களுக்குத் தெரியாததல்ல. அதாவது, தேர்தல் பாதுகாப்பு என்ற ரீதியில் சிறிலங்கா இராணுவம் கெடுபிடிகளை மேலும் அதிகரிக்கும் வாய்ப்புக்களை உயர்வாக்கும் என்பது எதிர்பார்க்கக் கூடியதே. அவ்வாறு இருந்தும் தமிழ் குழுக்கள் இத் தேர்தலில் பங்குபற்ற முன்வந்தமையானது, அவர்கள் தமிழர்கள் சிந்தும் இரத்தத்தில் தமது அரசியல் அபிலாசைகளை நிலைநிறுத்த எவ்வளவு அவாக்கொண்டுள்ளனர் என்பதையே இது காட்டுவதாக உள்ளது.

இந்நிலையானது, சிங்கள ஆட்சியாளர்களும் தமிழ் குழுக்களும் தமிழர் படும் இன்னல்கள் குறித்து ஒரேவித கருத்தினையே கொண்டுள்ளனர் என்பதை வெளிக்காட்டுவதாகவே உள்ளது. இந்த வகையில் இவ்விரு தரப்பினரும் தமிழர்களின் இன்னல்களில் தமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முனைந்துள்ளனர் என்றே கூறலாம். ஆனால் இவையாவும் ஜனநாயகம், சமாதானம் என்ற பெயரில் நடைபெறுகின்றன என்பதுதான் இன்றைய அபத்தமாகவும் அவலமாகவும் உள்ளது. ✳

# எங்கும் எல்லாவற்றிலும் எல்லோரிடமும் ஆளுமை செலுத்திய கேணல் கிட்டு

"அவனுள் ஒரு அபூர்வம் இருந்ததை நான் ஆரம்பத்தில் இருந்தே கண்டு கொண்டேன். அது அவனது அழகான ஆளுமையாக வளர்ந்தது. ஒரு சுதந்திர வீரனுக்குரிய அனைத்துச் சிறப்பியல்புகளும் அவனிடமிருந்தன. அதனால் அவன் ஒரு அற்புதமான இலட்சியவாதியாக வாழ்ந்தான் – போராடினான். அனைத்து மக்களதும் இதயங்களையும் கவர்ந்தான். போர்க்களத்தில் வீரனாகவும், பொதுமக்களின் தோழனாகவும் எங்கும் எல்லாவற்றிலும் எல்லோரிடமும் அவனது ஆளுமையின் வீச்சு நிறைந்திருந்தது."

சர்வதேசக் கடற்பரப்பு வழியே சமாதானப் பணி ஒன்றை மேற்கொண்டு தமிழீழம் நோக்கி கேணல் கிட்டுவும் குட்டிசிறி உட்பட ஏனைய தோழர்களும் பிரயாணம் செய்து கொண்டிருந்த கப்பலை சர்வதேச கடற் சட்டத்தை மீறி தடுத்து நிறுத்தி, மரணப் பொறியொன்றை அமைத்து அவர்களை இந்தியா சாகடித்த 16–01–93 இல் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் விடுத்த அறிக்கையில் உள்ள வரிகளே மேலே மீளவும் நினைவு கூறப்பட்டுள்ளன.

தேசியத் தலைவர் கூறியுள்ள வார்த்தைகளின் உண்மை, கேணல் கிட்டுவின் போர்க்களத் தலைமையில் மட்டுமல்ல அனைத்துலகப் பணியகத் தலைமையிலும் தெளிவாக வெளிப்பட்டது. கேணல் கிட்டு சர்வதேசச் செயலகத்தின் தலைமைப் பொறுப்புக்களை




ஏற்ற நேரம் மிகச் சிக்கலான நேரம். சிறிலங்கா ஆக்கிரமிப்பு அரசு மட்டுமல்ல, இந்திய அரசும் தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டம் குறித்த உண்மைக்கு மாறான செய்திகளைச் சர்வதேச அரங்கில் திணித்துக் கொண்டிருந்த நேரம். ஆனாலும் கேணல் கிட்டு கலங்கவில்லை. கண்ணியமான முறையில் மிகுந்த பொறுப்புணர்வுடன் சர்வதேச சமூகத்தினரை அணுகினார். தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டம் குறித்த உண்மைகளை உறுதியுடன் எடுத்துரைத்தார். எதையும் மறைக்காது எதற்கும் தயங்காது வரலாற்றை வரலாறாகவே வெளிப்படுத்தினார். விளக்கங்களை நுணுக்கமாக ஆனால் தெளிவாக எடுத்தியம்பினார். இதனால் அவரோடு உரையாடியவர்கள் உண்மைகளைக் கண்டறிந்தனர். தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தைப் படம்பிடித்துக் காட்டும் கட்புலனாக கேணல் கிட்டு விளங்கினார்.

சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள், தமிழீழ விடுதலைப் புலிகளுடன் உத்தியோகபூர்வ சந்திப்புக்களைக் கூட மேற்கொள்ள மறுத்துவந்த காலகட்டத்தில் உறுதியுடன் அவர்களை அணுகி, "தமிழீழ மக்களின் பிரச்சினைகளை தமிழீழ மக்களின் உண்மைப் பிரதிநிதிகளுடன் கலந்து பேசாது தீர்க்க முடியாது" என்ற உண்மையை அவர்களுக்கு எடுத்துரைத்த பணியாளர். இதற்குப் பல உதாரணங்கள் உண்டு. அவற்றில் ஒரு சிறு உதாரணம்:

சர்வதேச மன்னிப்புச் சபையின் பிரதிநிதியைக் கேணல் கிட்டு சந்தித்தார். அந்நேரம் தமிழீழத்தில் கைதிகளைப் பராமரிப்பது தொடர்பாக சர்வதேச மன்னிப்புச்சபை பிரதிநிதி உரையாடினார். கேணல் கிட்டு அவருக்குப் பதிலுரையாக, "இந்தப் பிரச்சினை சிறிலங்கா பிரகடனப்படுத்தியுள்ள போரின் விளைவாகவே தமிழர்களுக்குத் தோன்றியுள்ளது: எனவே இவற்றை எப்படிச் செய்வது என்பதில் எம்மவர்க்குப் போதிய அனுபவம் இல்லை என்பது உண்மைதான். வேண்டுமானால் நீங்கள் வந்து, கைதிகளைப் பொறுப்பேற்று ஒரு பாதுகாப்பு வலயத்தைப் பிரகடனப்படுத்தி அப்பகுதியில் வைத்து பராமரியுங்கள். நாங்கள் நீதி விசாரணைகளை மேற்கொண்டு, அவர்கள் குறித்து தேவையான நடவடிக்கைகள் எடுப்பதைச் செய்வோம். அதற்கு ஏற்றவாறு அவர்கள் விடுதலையடையலாம் அல்லது தண்டனை பெறலாம்" என்றார். இதனை மறுத்த அப் பிரதிநிதி, இதற்கு சர்வதேச மன்னிப்புச் சபையின் செயற் திட்டத்தில் அனுமதிக்கப்பட வில்லை என்றார்.

தொடர்ந்து கிட்டு, "அப்படியானால் இந்தப் புதிய பிரச்சினையைக் கையாள்வதில் எங்களுக்குப் பயிற்சிகளாவது தருவீர்களா?" என்றார். அதுவும் தமது அலுவல்களில் அடங்காது என அப் பிரதிநிதி மறுத்துவிட்டார்.

இதன் பின்னர் அப்பிரதிநிதிக்கு கைதிகளைப் பராமரிப்பதில் உள்ள நடைமுறைச் சிக்கல்களைக் கேணல் கிட்டு விளக்கத் தொடங்கினார். "சிறிலங்கா ஆக்கிரமிப்பு அரசு அடிக்கடி குண்டு வீசி வருவதினால், எறிகணைகளை வீசி வருவதினால் கைதிகளின் பாதுகாப்பு கருதி அவர்களை சிறைச்சாலைகள் அமைத்து பராமரிக்க முடியாதுள்ளது. மேலும் இடத்துக்கிடம் மாறவேண்டிய சூழ்நிலையை சிறிலங்கா தோற்றுவிப்பதால் கைதிகள் மேல் கண்காணிப்புக்களை மேற்கொள்ளாதுவிட்டால் அவர்கள் தப்பியோடக்கூடிய சாத்தியக்கூறுகள் அதிகம் உண்டு. அதுமட்டுமல்ல, நாங்களே சாப்பிட முடியாமல், சிறிலங்கா உணவுத் தடைகளையும் இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கையில் அவர்களுக்கு உணவு அளிப்பதும் பெரும் பிரச்சினை தான். இப்படிப் பல நடைமுறைப் பிரச்சினைகளுக்கு மத்தியிலும் நாம் இயன்றளவு கைதிகளைப் பராமரிக்கிறோம். அதுமட்டுமல்ல, நான் அங்கு இருக்கும்போது கைதிகள் பரிமாற்றத்தை ஏற்படுத்தினேன். இன்றும் கைதிகளைப் பரிமாற்றுவதற்கும் மனிதாய அடிப்படையில் விடுவிப்பதற்கும் எமது தேசியத் தலைவர் பிரபாகரன் போதிய சந்தர்ப்பங்கள் கொடுத்து வருகிறார். ஆனால் சட்டபூர்வ அரசு எனக் கூறிக் கொள்ளும் சிறிலங்கா அரசு, மனிதாயத்துக்கு எதிரான சர்வதேச சட்டங்களுக்கு எதிரான இனஅழிப்புக்கள், இனக்கொலைகள், பொதுமக்கள் மீது போர் என்பவற்றை மேற்கொண்டு இப்பிரச்சினையை மேலும் மோசமாக்குகிறது" என அழகாக விளக்கினார். அவரின் பதில்களில் திருப்தி அடைந்த அந்தப் பிரதிநிதி, தான் முன்பு சந்திப்புக்கு நேரம் ஒதுக்க மறுத்தமைக்கு மன்னிப்பும் கேட்டார். இவ்வாறு கேணல் கிட்டுவுடன் பேசிய ஒவ்வொருவரும் தமது சந்தேகங்களுக்கான தெளிவான விளக்கங்களையும் தமிழீழத்தின் யதார்த்த தன்மைகளையும் நன்கு புரிந்து கொண்டனர். இவ்வாறு நேர்மையுடனும் உண்மையுடனும் நடந்து கொண்டமையினாலேயே சிறிலங்கா அரசினதும் இந்திய அரசினதும் தமிழீழ விடுதலைப் போராட்டம் குறித்த உண்மைக்கு மாறான சர்வதேச பரப்புரைகளை முறியடிக்க முடிந்தது. கேணல் கிட்டுவின் உண்மையான, நேர்மையான செயற்பாடுகள் மேலைநாடுகள் பலவற்றின் அரசியல் தலைவர்களை, இராஜதந்திரிகளை, மனித உரிமை நிறுவனங்களின் முக்கிய பிரமுகர்களை, அரசியல் செல்வாக்



குள்ள சில தனிநபர்களை அடிக்கடி சந்திக்கும் வாய்ப்புக்களை அவருக்கு உருவாக்கிக் கொடுத்தது. இவ்வேளைகளில் ஆயுதம் தாங்கிய எமது விடுதலைப் போராட்டத்தின் தவிர்க்க முடியாத தேவைகள் பற்றியும் சிங்கள பேரினவாத அரசின் அடக்குமுறைகள் பற்றியும் இனஅழிப்பு நடவடிக்கைகள் பற்றியும் எடுத்து விளக்கி, சர்வதேச அரசுகளும் அரச சார்பற்ற நிறுவனங்களும் மனித உரிமை அமைப்புகளும் சமாதானத்திற்கான இயக்கங்களும்

**ஆ.பற்றிமாகரன்**

எமது பிரச்சினை குறித்தும் அக்கறைகாட்ட வித்திட்டார்.

மேலும், இலங்கைத் தீவில் சமாதானத்தை ஏற்படுத்த விரும்பிய மேலைநாடுகள் சிலவும் மனித உரிமை நிறுவனங்கள் சிலவும் கேணல் கிட்டுவுடன் இனப்பிரச்சினை தொடர்பான மறைமுகப் பேச்சுவார்த்தைகளை நடாத்தின. அவ்வேளைகளில் கேணல் கிட்டுவை ஒரு சிறந்த இராஜதந்திரியாகவும் மேலைத்தேய சமூகம் கணித்துக் கொண்டது.

கேணல் கிட்டுவின் இந்த இராஜதந்திரப் பணி அவரைச் சாகடித்த இந்திய அரசுடனும் இந்தியாவில் இருந்த காலத்தில் நடைபெற்றமை நினைவு கூறப்பட வேண்டியதொன்று. இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிரான போர், தமிழீழத்தில் நடந்து கொண்டிருந்த நேரத்தில் இந்தியாவில் இருந்த கேணல் கிட்டு, இந்திய அரசின் வற்புறுத்தல்களுடன் கூடிய இராஜதந்திரத்துக்கு முகங் கொடுத்து, போர் நிறுத்தத்திற்கான இராஜதந்திர முயற்சிகளில் ஈடுபட்டார். இந்திய புலனாய்வுத்துறையின் உயர்மட்ட அதிகாரிகளுடன் பேச்சுக்கள் நடாத்தி ஒரு சமாதான உடன்படிக்கையை ஏற்படுத்த அயராது பாடுபட்டார். லெப். கேணல் ஜொனியை இந்திய புலனாய்வுத்துறையின் சிபார்சுடன் தலைவர் பிரபாகரனுடன் தொடர்பு கொள்ளவென தமிழீழம் அனுப்பி வைத்தபோது, அவரை இந்தியப் படை நயவஞ்சமாகக் கொலை செய்ததன் மூலம் கேணல் கிட்டுவின் இராஜதந்திர முயற்சியையும் வீணடித்தனர். கேணல் கிட்டு தலைசிறந்த தளபதியாக மட்டுமல்ல, தலைசிறந்த இராஜதந்திரியாகவும் விளங்கினார் என்பதற்குப் பல உதாரணங்கள் உண்டு.

கேணல் கிட்டுவைப் பொறுத்தவரை, அவர் மேலைத்தேயங்களில் வாழ்ந்த காலத்தில் அவர் கண்ட தொழில்நுட்ப வளர்ச்சிகளை, விஞ்ஞானப் புதுமைகளை, கருத்தியல் வளர்ச்சிகளை எல்லாம் தமிழீழ மண்ணுடன் மக்களுடன் இணைக்கத் துடித்தார். சீஸ் வகைகளைக் கண்டதும் தமிழீழத்தில் உள்ள பால் வளத்தில் இருந்தும் இவ்வாறு சீஸ் செய்ய வேண்டுமென்னும் ஆர்வம் அவர் மனதை உந்தும். மாட்டுப் பண்ணைகளுக்கு போய் அவற்றை நேரில் பார்த்து பால் பதனிடுதல் முதல் பாலுணவு உற்பத்திகள் குறித்து தகவல்கள் திரட்டுவார். கோழிப்பண்ணைகள், விவசாயப் பண்ணைகள் என அவர் தானே நேரில் சென்று தகவல்களைத் திரட்டுவார். அச்சமயங்களில் அவர் கேட்கும் கேள்விகளின் ஆழத்தை, தெளிவைக் கண்டு பிரமிப்பு அடையும் பண்ணைச் சொந்தக்காரர்கள் அவரையும் ஏதோ பெரும் பண்ணை ஒன்றின் சொந்தக்காரர் என நினைத்து உபசரித்து கதைப்பதை அவருடன் கூடச் செல்லும் நண்பர்கள் கண்டு திகைத்ததுண்டு.

அவ்வாறே, எந்தத் தொழில்நுட்பம் என்றாலும் அதனைச் சரிவரத் தெரிந்து

தொடர்ச்சி 6 ம் பக்கம்......

# உரிமையுடன் கிட்டண்ணா!

ஒரு ஆற்றலை.... ஒரு அறிவை... ஒரு ஆளுமையை.... ஒரு நெருப்பை... ஒரு கனிவை... ஒரு வீரத்தை... ஒரு வித்தகத்தை... ஒரு சிறப்பை... ஒரு பெருமையை நாங்கள் பறிகொடுத்து ஐந்து ஆண்டுகள் ஆகிவிட்டன. தமிழர்களின் மானம் பறிபோய்விடக்கூடாது என்பதற்காக, விடுதலைமுரசம் தலைகுனிந்து விலங்கு சுமந்து இழிநிலைக்கு ஆளாகக்கூடாது என்பதற்காக, இந்தச் சிறப்புக்களை ஒரு சேரக்கொண்ட ஒரு அற்புதமான இலட்சியவீரன் தன்னைத்தானே அழித்துக் கொண்டு ஆண்டு ஐந்தாகிவிட்ட போதும் ஈரம்மாறாத அந்த மாவீரனின் நினைவுகள் இதயத்தை உலுப்பிக்கொண்டே இருக்கின்றன.

*கிட்டண்ணா! கேணல் கிட்டு!!*

உரிமையுடன் ஊடுருவி நின்ற ஏதோ ஒரு ஈடுபாடு பிணைப்பால் நெருக்கத்தால் எங்களிடையே அவர்

**~ ஜெயா ~**

கிட்டண்ணா!

இனத்தை தலைநிமிர வைத்த வீரன், சரித்திரத்தை திருத்திய தளபதி எனும் வகையில் நெஞ்சை நிமிர்த்தி நாம் பெருமையுடன் கூறும் பெயர் கேணல் கிட்டு!!

கிட்டண்ணா பொல்லாதவர். பேசுவார். கிட்டநிண்டால் விளாசிப்போடுவார்.கதைவிட்டுத்தப்பேலாது.

பொதுவாக எம்மவரிடையே பரவிப்போயிருந்த அவரது குணாதிசயங்கள் பற்றிய கதை, அல்லது பயம், கட்டுப்பாடான ஒரு நடைமுறைச் செயற்பாட்டுக்கு எவ்வளவு உறுதுணையாக இருந்ததென்பது கண்கூடு.

பிரித்தானியாவில் இருந்தபடி, உலகம் பூராவும் இயக்கச் செயற்பாடுகளை, தொலைபேசிக்கூடாக நடத்திக்காட்டிய திறன் வேறுயாருக்கும் வாய்ப்பது கடினமே.

ஒரு தொலைபேசி அழைப்பிலேயே ஒரு பெரும் காரியத்தை இலகுவாக முடித்துவிடுவார்.

காலதாமதம் அவருக்குப் பிடிக்காத ஒன்று. உரிய காலத்தில் எதையும் சிறப்பாய் செய்து முடிக்கப்படவேண்டும் என்பது அவரது சமரசத்திற்கு இடம்மில்லாத கட்டளை.

ஒரு வெளியீடாக இருத்தாலென்ன, ஒரு கலை நிகழ்ச்சியாக இருந்தாலென்ன, வேறு இயக்கச் செயற்பாடுகள் எதுவாக இருந்தாலும் இதுவே அடிப்படை.

கிட்டண்ணாவின் தொலைபேசி அழைப்பில் தோழர்கள் நடுங்கினார்கள் என்பதைவிட இயங்கினார்கள் என்பதே பொருத்தமானது.

அந்தக் குரலுக்கு அப்படி ஒரு ஆற்றல். அப்படி ஒரு ஆளுமை.

எப்படிச் சாத்தியமாயிற்று?

கிட்டண்ணாவின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் கடுமைக்கும் பின்னால்... ஒரு கனிவு இருந்தது அதுதான் சூட்சுமம். மாசுபடாத அன்பிருந்தது. கட்டியணைத்து முத்தமிடும் போது அதில் கள்ளத்தனம் இல்லாத ஆத்மாவின் பரிசுத்தம் விழிகளை நனைத்தது அதுதான் காரணம். உச்சிமோந்து பாராட்டும் போதும் வேலை பழுதென்று திட்டும்போதும் ஒரு உண்மைத் தந்தையின் பாசமும் கடுமையும் தெரிந்தது.

இது தான்... இந்த உண்மைத்தனம்தான் அந்த ஆற்றலைச் சுற்றி தோழர்களை இயங்கவைத்தது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் மூத்ததளபதிகள் வரிசையில் இடம்பிடித்த ஒரு சிறப்பாளி சாதாரணமாக எல்லோரிடத்திலும் இயல்பாக பழகி... பகிடிவிட்டு... மச்சான் எனச் சொந்தம்கொண்டாடி..



கட்டிப்பிடித்து குஸ்திபோட்டு... கோவித்துப் பேசி... பிறகு அன்பு மேலிட அணைத்துச் சாந்தப்படுத்தி...

நிட்சயமாக இதில் வியாபாரம் கிடையாது. இதில் அரசியல்வாதிகள் போன்ற கீழ்த்தரமான நோக்கம் கிடையாது. கபடம் கிடையாது. கள்ளத்தனம் இதில் ஒளித்திருக்காது.

இது அவரது இயல்பு. மக்களுக்காகவே தன்னை ஒப்படைத்துப் பணிபுரிந்த அந்த மதிப்பிற்குரிய கிட்டண்ணாவின் இயல்பு அது. அதுதான் அவரது ஆளுமையின் ஆதாரவேர்.

உலகம் எங்கும் இருந்த இயக்கபணியாளர்கள் கிட்டண்ணாவின் சொற்கேட்டு, விழுந்தடித்து வேகமாக செயற்பட்டார்கள் என்பது தெரிந்ததுதான். ஆனால் இவர்களையெல்லாம் இயக்கிய கிட்டண்ணா தலைவரின் சொல்கேட்டு மசிந்து நின்று சிறுபிள்ளைபோல தலையாட்டி பணிந்துநின்ற காட்சிகளையும் நம்தோழர்கள் கண்ணுற்று ரசிக்கத் தவறவில்லை.

அன்று, ஒரு நாள் பிரித்தானியாவில் இருந்து, யாழ் கோண்டாவில் அரசியல் அலுவலகத்திற்கு கிட்டண்ணா தொலைபேசி எடுத்தார்.

"டேய் யாரடா நிற்கினம்" கிட்டண்ணாவின் வழமையான அதட்டல்.

"அண்ணை நிக்கிறார்" அங்கிருந்த தோழரின் பதில்.

"எந்த அண்ணையடா" தனது தோழர்கள் யாராவதாக இருக்கக்கூடும் என்ற நினைப்பில் கிட்டண்ணையின் வழமையான உருட்டல்.

"யார் கிட்டுவோ...?" இது எதிர்முனையில் இருந்து தலைவர்.

கிட்டண்ணைக்கு பதில் வரவில்லை. சட்டென்று எழுந்து நின்று நாக்கைச் சப்பிக் கொண்டார். தட்டித்தடக்கி கதைத்தார். எதுகதைப்பதென்றே அவருக்குப் புரியவில்லை. அதாவது கிட்டண்ணையுடன் கதைக்கும்போது மற்றைய தோழர்களுக்கு இருக்கும் அவஸ்த்தை.

"எப்பிடி சுகமாய் இருக்கிறியா "கிட்டண்ணாவின் சங்கடத்தைப் புரிந்து கொண்டாரோ என்னவோ, மீண்டும் தலைவர்.

" ஓம்... அண்ணை"

தலைவரிடத்தே கிட்டண்ணை கொண்டிருந்த மதிப்பு, பணிவு, அன்பு இவற்றை விளக்க இச்சிறு சம்பவம் ஒன்றே போதுமானது. இயக்கம் சிறப்பாக கட்டுப்பாட்டுடன் இயங்க இந்த உள்ளார்ந்த உண்மையான ஒழுங்குப் பிணைப்பே காரணம். தலைவர் குறித்து கிட்டண்ணா எப்போதும் பெருமை பேசுவார். அவரின் உருவத்தில் இருந்து அவரது பழக்கவழக்கங்கள், செயற்பாடுகள் அவரது சிந்தனைகள் குறித்து தன்னைச் சூழஉள்ளவர்களுக்கு அடிக்கடி சொல்லிக்கொண்டே இருப்பார்.

தலைவரை தனது நெஞ்சத்தில் நிறைத்து, மக்களை, விடுதலையை, தேசத்தின் உயர்ச்சியை தனது ஒற்றைக் காலில் சுமந்து நடந்த கிட்டண்ணாவை, தேசம் நோக்கிய பயணத்தில் ஐந்து ஆண்டுகளுக்கு முன்னம் நாம் பறிகொடுத்துவிட்டோம்.

# பெருமையுடன் கேணல் கிட்டு!!

வங்கக்கடல் நடுவே வாய் பிளந்து நின்ற கொடும் இந்திய வல்லாதிக்க முதலைகளின் சுற்றிவளைப்பில் சிக்கியபோதும், விடுதலையின் கனபரிமாணத்தை தன் நெஞ்சைப் பிளந்து காட்டிய பெருமைக்குரிய எங்கள் கிட்டண்ணாவின் நினைவுகள் எம்மில் நிறைவதாக! ✳

## எங்கும் எல்லாவற்றிலும்........

கொள்வதில் அவர் பெரிதும் ஆர்வம் காட்டினார்.

'டட் டிஜிட்டல்' பதிப்பு பற்றி கண்டறிந்து வரும்படி அவர் அனுப்பிய அவரின் நண்பர் ஒருவரை கேள்விக்கு மேல் கேள்வியாகத் துளைத்து விசாரித்தது போதாது என, திரும்பவும் அங்குபோய் விசாரித்து வந்து விளக்கங்களை பெற்றார். மேலும் பன்றி இறைச்சி ஐரோப்பாவின் பொது உணவாக இருப்பதைக் கண்ட கிட்டு, இவ்வாறான பன்றி வளர்ப்புப் பண்ணைகளை விஞ்ஞான தொழில்நுட்ப உத்திகளுடன் தமிழீழத்தில் நிறுவுவதில் உள்ள நன்மை தீமைகளைக் கேட்டறிந்து குறித்துக் கொண்டார். அத்துடன், எம் மக்களுக்கு மத்தியில் பன்றி இறைச்சி உண்பதில் உள்ள மூடநம்பிக்கைகளை எவ்வாறு தெளிவாக்குவது எனவும் அவர் சிந்திக்கத் தொடங்கிவிடுவார்.

மேலைத்தேயத்து பெண்மைவாதம், கிட்டுவை சிந்திக்க வைத்தது. எமது பெண்களின் அடிமைத்தனங்கள், ஒடுக்குமுறைகள் நீக்கப்பட்டு அவர்கள் பூரண விடுதலை அனுபவிக்க வேண்டும் என்பது கேணல் கிட்டுவின் இதய ஆசை. அதேவேளை பெண்மைவாதம் எனும் பெயரில் மேலைத்தேயத்தவரின் கலாச்சாரச் சீரழிவுகள், பாலியல் அலங்கோலங்கள் தமிழீழத்தில் நுழைய அனுமதிக்கக் கூடாதென்பதிலும் அவர் உறுதியுடன் காணப்பட்டார்.

இதேபோல் சாதியமைப்பு முறை, தமிழ் மக்கள் அனைவரிலும் இருந்து வேரோடு பிடுங்கப்பட்டாலே சமூக விடுதலை தமிழர்கள் மத்தியில் சாத்தியமாகும் என்பதில் கேணல் கிட்டு மிகுந்த அக்கறை கொண்டிருந்தார். இதனால் சிறுவயது படிப்பு முதல் கலாநிதிப் பட்டம் வரையான கல்வியில் சாதியமைப்பு எனும் சமுதாயச் சதி பற்றிய விளக்கங்கள் தமிழ்க் குழந்தைகளுக்குக் கொடுக்கப்பட வேண்டும் எனவும் இதற்கான பாடத்திட்டங்கள் புலம்பெயர் தமிழர்களில் உள்ள அறிஞர்களால் தயாரிக்கப்பட வேண்டுமெனவும் கூறிவந்தார்.

கேணல் கிட்டு, தமிழீழ மக்களிடையே தொண்டர் அமைப்புகள் செயற்பட்டு மக்களதும் நாட்டினதும் வளர்ச்சிக்கு உதவ வேண்டுமென்பதில் பலத்த அக்கறை காட்டினார். இதற்கு உதாரணமாக காந்திய சேவா சங்கங்களின் சேவைகளாலேயே பிரித்தானியரிடம் இருந்து விடுபட்ட இந்திய மக்கள் சமூக, பொருளாதார வளர்ச்சிகள் பலவற்றைக் கண்டனர் என்பதனை எடுத்துக் கூறுவார். அது மட்டுமல்ல, தியாகி திலீபன், அன்னை பூபதி போன்றோர் காந்தியத்தின் அகிம்சை வாதத்திற்கு சரித்திர சான்றாகியதுபோல, காந்தியத்தின் சமூக சேவை அமைப்புக்கள் போன்ற அமைப்புகளும் தமிழீழத்தில் புத்துயிர் பெற்று இந்தியாவிற்கும் வழிகாட்டும் என்பதில் அவருக்கு பலத்த நம்பிக்கையிருந்தது. நாம் வன்முறைவாதிகள் அல்ல. வாழ்வின் தேவை கருதி ஆயுதம் தூக்கினோம். விடுதலை பெற்றதும் ஆயுதம் வைக்கப்பட்டு, தேசத்தின் நிர்மாணத்துக்காக தொண்டர் அமைப்புகள் ஊடாக கிளர்ந்தெழ வேண்டும் என்பதும் கேணல் கிட்டுவின் உரையாடல்களில் தென்படும்.

இவ்வாறாக, விடுதலைப் புலிகள் இயக்கம் பயங்கரவாத இயக்கமல்ல. ஒரு தேசத்தின் விடுதலை இயக்கம். அது அரசியல் கைமாற்றத்தை விரும்பவில்லை. மக்களின் முழுமையான அரசியல் – சமூக – பொருளாதார விடுதலையை விரும்புகிறது – அதை அடையப் பாடுபடுகிறது – அதை அடைந்தே தீரும் என சர்வதேச சமூகத்தினருக்குச் சொல்லாலும் வாழ்வாலும் எடுத்துக் காட்டினார். இதனாலேயே, அவரை ஒரு சமாதானப் பணியாளராகவும் மேலைத்தேயம் கருதியது.

சமாதானப் பணிக்கான பொறுப்பையும் சர்வதேச சமூகம் அவரிடம் ஒப்படைத்தது. இந்தச் சமாதானப் பணிக்காக அவர் ஆரம்பித்த தமிழீழம் நோக்கிய கடல்வழிப் பயணம்தான், இந்திய அரசால் அநியாயமாகத் தடுக்கப்பட்டு அவரின் வீரச்சாவுக்குக் காரணமாகியது.

எனவே, கேணல் கிட்டுவின் 5வது நினைவு ஆண்டு தமிழீழ மக்களாலும் சர்வதேச புலம்பெயர் தமிழீழத்தவர்களாலும் உலகத் தமிழர்களாலும் வீரவணக்கத்துடன் நினைவுகூரப்படும் இந்நேரத்தில், அவர் விரும்பிய தமிழீழ விடுதலை, தமிழீழ மக்களின் சமாதானம் எனும் இரண்டும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்த விடயங்கள் என்பதை உணர்ந்து, அவை நிறைவுபெற உழைக்க அனைத்துத் தமிழர்களும் உறுதி பூணுதல் வேண்டும். மேலும் இந்த நேரத்திலாவது, இந்தியா தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தின் தேவைகளையும் நியாயத்தையும் அதன் உண்மைகளையும் ஏற்று, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தையும் அங்கீகரித்து, தென்னாசியாவின் அமைதிக்கும் தமிழக – தமிழீழ மக்களின் நல்லுறவுக்கும் புதியதோர் பாலம் அமைக்க முன்வர வேண்டுமென்பதே அனைத்துத் தமிழர்களினதும் விருப்பாகும். ✳

# தமிழீழப் போராட்டத்தை உயிர்த்துடிப்புடன் வைத்திருக்கும் தலைவர்

சூறித்த ஒரு இராணுவ நடவடிக்கை, என்ன நோக்கத்திற்காக நடாத்தப்படுகின்றது என்பதை சரியான முறையில் விரைவாகப் புரிந்து, தீர்க்க தரிசனமான



முடிவுகளை எடுப்பது போராட்டத் தலைமைகளின் கைகளில் தங்கியுள்ளது. ஏனெனில், அனைத்து இராணுவ நடவடிக்கைகளையும் எதிர்கொண்டு போராடும் சக்தி, தனது உச்சவளர்ச்சி நிலையை அடையும்வரை ஒரு விடுதலைச் சேனைக்கு இருக்க மாட்டாது. எனவே, எதிர்த்துப் போராட வேண்டியதை இனங்கண்டு எதிர்கொண்டு, மற்றையவைகளைத் தவிர்த்து ஒதுங்கும் முடிவுகளை போராட்டத் தலைமைகள் எடுக்கும். எதிர்த்துப் போராட வேண்டிய படையெடுப்புக்களை எவ்வாறு எதிர்கொள்வது! எத்தகைய தந்திரோபாயங்களைப் பயன்படுத்துவது என்றும் அவை தீர்க்கமாக முடிவெடுக்கும்.

எதிரியின் திசைதிருப்பல் முயற்சிகளுக்கும் மத்தியில், படையெடுப்புகளின் உண்மையான நோக்கங்களைக் கண்டறிவது இலகுவான காரியமல்ல. அப்படியும் இருக்கலாம் அல்லது இப்படியும் இருக்கலாம் என்ற பாணியில் ஒரு விடுதலைச் சேனையின் தலைவன் முடிவெடுக்க முடியாது. ஏனெனில் படையெடுப்பை எதிர்கொள்ளப் போகும் விடுதலைச் சேனையின் தலைமைத் தளபதி அவர்தான். எனவே ஊகங்களை அல்ல, முடிவுகளையே எடுக்க வேண்டும். 'இதுதான் அதன் நோக்கம்' என்று உறுதியாக எதிர்வு கூறி அதற்கேற்றவாறு செயற்படும் சிக்கலான பணி அந்தத் தலைமைக்கு உண்டு. தமிழீழ விடுதலைப் போராட்டத்தைப் பொறுத்தளவில் இந்தச் சிக்கலான பணியை தலைவர் பிரபாகரன் வெகு கச்சிதமாக ஆற்றி வருகின்றார்.

இந்திய – சிங்கள படையெடுப்புக்களின் நோக்கங்களை, அதன் தன்மைகளை சரியாக உய்த்துணர்ந்து – விவேகமான முடிவுகளை எடுத்து – எதிர்ப்பதை எதிர்த்து தவிர்ப்பதை தவிர்த்து – போராட்டத்தை வெற்றிப் பாதையிலேயே கொண்டு நடாத்துகின்றார்.

நூறுக்கும் மேற்பட்ட, பல்வேறு நோக்கங்களைக் கொண்ட இராணுவ நடவடிக்கைகளை புலிகள் இயக்கம் சந்தித்துவிட்டது.

1987 நடுப்பகுதியில் வடமராட்சி மீது நடாத்தப்பட்ட 'ஒப்பரேசன் லிபரேசன்' தமிழ் மக்களை மிரட்டிய முதலாவது இராணுவ நடவடிக்கையாகும். சரியாகப் 10 ஆண்டுகளின் பின்னர் கடைசியாக 'ஜெயசிக்குறுய்' மக்களை மிரட்டிக் கொண்டிருக்கிறது. இந்திய ஆக்கிரமிப்பின் தலைவிதியை நிர்ணயித்த 'செக்மேற்' நடவடிக்கையின் நோக்கத்தை இந்திய அரசு பகிரங்கமாகவே அறிவித்தது. இந்த நடவடிக்கையை எதிர்கொள்வதற்குத் தலைவர் பிரபாகரனுக்கும் இரண்டே இரண்டு தெரிவுகள் மட்டுமே இருந்தன. ஒன்று, சரணடைவது. இரண்டு, சாகும்வரை போராடுவது. தலைவர் இரண்டாவதைச் சந்திக்க முடிவெடுத்தார். களத்தை நேரடியாக வழிநடாத்தினார். வரலாற்றைப் படைத்தார்.

## "எதிரியின் பலவீனத்தை அறி. ஓங்கி அதிலேயே அடி"

அதேபோல, 'ரிவிரச' என்ற யாழ்ப்பாணப் படையெடுப்பும் புலிகள் இயக்கம் சந்தித்த முக்கிய படையெடுப்பாகும். குடாநாட்டின் புவியியல் சிறைக்குள் ஒரு மர்புவழிப் போரை நடாத்தி, புலிப்படையின் ஆட்பலத்தை அழித்து பெருந்தொகை மக்களையும் கொன்று, போராடினால் இதுதான் நடக்கும் என்ற பாடத்தையும் படிப்பித்து, விடுதலைப் போராட்டத்தை ஒடுக்க சிங்கள அரசு முடிவெடுத்திருந்தது. சதி இழைகளால் பின்னப்பட்ட எதிரியின் கோரமான தந்திரோபாய வலைக்குள் இருந்து தலவர் அவர்கள், புலிப்படையின் ஆட்பலத்தையும் பாதுகாத்து அதே வேளை ஆக்கிரமிப்புப் படைகளுக்கு கணிசமான ஆள் இழப்பையும் ஏற்படுத்தி போராட்டத்தை உயிர்த்துடிப்புடன் வைத்திருக்கின்றார்.

அத்துடன், மன்னார் பெரு நிலப்பரப்பினூடாக 'எடிபல' செல்லத் தொடங்கியபோது, அதன் நோக்கங்களையும் சாதக – பாதக விளைவுகளையும் ஆராய்ந்து பார்த்த தலைவர் அவர்கள், இறுதியில் 'எடிபல'வைப் போக அனுமதித்து புலிவீரர்களை ஒதுங்கியிருக்கப் பணித்தார். ஆனால், 'ஜெயசிக்குறுய்'யை படையினர் ஆரம்பித்தபோது, அதை வேறுவிதமாக எதிர்கொள்ள அவர் முடிவெடுத்தார். அதனுடைய பலாபலன்களை உலகம் காணத் தொடங்கிவிட்டது.

'எதிரியின் பலவீனத்தை அறி. ஓங்கி அதிலேயே அடி'

என்பது தலைவரின் செயல் மந்திரம்! ✳

"ரிவிரச" என்ற யாழ்ப்பாணப் படையெடுப்பும் புலிகள் இயக்கம் சந்தித்த முக்கிய படையெடுப்பாகும். குடாநாட்டின் புவியியல் சிறைக்குள் ஒரு மரபுவழிப் போரை நடாத்தி, புலிப்படையின் ஆட்பலத்தை அழித்து பெருந்தொகை மக்களையும் கொன்று, போராடினால் இதுதான் நடக்கும் என்ற பாடத்தையும் படிப்பித்து, விடுதலைப் போராட்டத்தை ஒடுக்க சிங்கள அரசு முடிவெடுத்திருந்தது. சதி இழைகளால் பின்னப்பட்ட எதிரியின் கோரமான தந்திரோபாய வலைக்குள் இருந்து தலவர் அவர்கள், புலிப்படையின் ஆட்பலத்தையும் பாதுகாத்து அதேவேளை ஆக்கிரமிப்புப் படைகளுக்கு கணிசமான ஆள் இழப்பையும் ஏற்படுத்தி போராட்டத்தை உயிர்த்துடிப்புடன் வைத்திருக்கின்றார்.


50 ஆண்டு கால அடக்குமுறையை எதிர்த்து

## லண்டனில் மாபெரும் எழுச்சிப் பேரணி

**காலம் :**
**01 - 02 - 98**
**ஞாயிறு காலை**
**11.00 மணிக்கு**

**இடம் :**
Hyde Park
Reformers Tree
✳ (அருகாமையிலுள்ள Underground நிலையம் Marble Arch)

UTO. ☎ 0171 - 403 4554

சிங்கள தேசம் தனது சுதந்திர பொன்விழாவை கேளிக்கைகளுடன் கொண்டாடவுள்ள வேளையில், சிங்கள அரசுகளின் 50 ஆண்டுகால தமிழினப் படுகொலைகளை, அடக்குமுறைக் கொடூரங்களை அம்பலப்படுத்தவும் எமது தேசியக்கொடியை ஏற்றி தமிழினத்தின் தேசிய சுதந்திர உணர்வுகளை வெளிப்படுத்தவும் பேரணியில் அணி திரள்வோம்.!

**எமது தேசம் விடியும் வரை விடுதலைப் பயணத்தை உறுதியுடன் தொடர்வோம்.**

# தொடர்கதை

புலம்பெயர் நாடுகளில் வாழும் அனைத்துத் தமிழர்களும் தமிழீழ விடுதலைப் போராட்டத்துடன் தம்மை நெருக்கமாக பிணைத்துக் கொள்ளவேண்டிய காலகட்டத்தில் இருப்பதனால், விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு தமிழீழத்தில் வெளியிட்ட இவ் வேண்டுகோள் கட்டுரையை இங்கும் பிரசுரிப்பது பொருத்தமாகவிருக்குமென நம்புகிறோம்.

## அன்பான எமது உடன்பிறப்புக்களே!

*நீங்கள் நீங்களாகவே சிந்தித்து செயற்படவேண்டிய காலம் வந்து விட்டது. தமிழீழ அன்னை சொரியும் கண்ணீர் மழையின் ஒரு துளியை யாவது, உங்கள் கைகளால் துடைத்தெறியும் நேரம் நெருங்கி விட்டது. விடுதலைப் போராட்டத்தின் நீண்ட வரலாற்றிலே மீண்டும் போராட்ட சுமைகளை உங்கள் தோள்களிலேயும் சுமக்க வேண்டிய வேளையிது.*

ஒரு நிமிடம் உங்கள் புறக்கண்ணை மூடுங்கள்: புறச்சூழலை மறவுங்கள். அகக்கண்ணெனும் அறிவுக்கண்ணைத் திறவுங்கள். என்ன தெரிகின்றது அங்கே? 1970 களை அண்டிய காலப்பகுதி அது. விடுதலைப் போராட்டம் கருக்கொண்ட நாட்கள் அவை. வேறுபட்டும், மாறுபட்டும் மக்கள் கூட்டம் மயங்கி நின்ற சூழல். ஆண்டாண்டு காலமாக அழுதும் தொழுதும் மண்டியிட்டும் மன்றாடியும் வாழ்ந்த இனத்தின் அவமதிப்பைத் தாங்காது, மனம்பொங்கி கொதித்து எழுந்தோரை நீங்கள் காண்பீர்கள். யார் இவர்கள்? தமிழ் இனத்தின் தன்மானச் சுமையைத் தாமாகவே தம் தோள்களில் ஏற்றி, மிக நீண்டதூரம் காவிச் சென்றவர்கள் இவர்கள். இவ்இளையோர்கள் உங்கள் முன்னோர்கள் அல்லவா? இவர்களில் உங்களை நீங்கள் காணவில்லையா? முகங்கள் மறையும் அத்தோற்றத்துக்குள்ளே உங்கள் முகமும் தெரிய வில்லையா?

ஆயுதம் எதுவும் இல்லாமலேயே, அன்று ஆயுதப்போராட்டத்தை ஆரம்பித்த இவ்இளையோர் முதிர்ந்த ஞானிகள் போல் பற்றுக்கள் அறுத்து, பந்தபாசம் துறந்து எவ்வாறு இனமானம் காக்கும் காப்பாளர் ஆகினர். என்ன அற்புதம் நிகழ்ந்தது இவர்களுக்குள்ளே? அன்னை மடிதரும் அன்பான அரவணைப்பைப் பிரிந்து, உடன்பிறப்புக்களின் பரிவான பாசம் துறந்து, இதம்தரும் இல்லத்தினின்றும் நீங்கி, விடுதலை என்னும் புத்துலகைக்காண பேரிடர்கள் நிறைந்த சிங்களத்தின் வேட்டைக் காட்டுக்குள்ளே பிரவேசித்தனர். துணிவு, இலட்சியப்பற்று, பிறருக்காக வாழ்தல் என்னும் பெரும் கோட்பாடுகளை வரித்த புனிதராகினர். இறுதியில் முகம் மலர்ந்து, விடுதலை வேள்வித்தீயிலே தம் உயிரையும் ஈர்ந்தனர். ஆனால், இவர்களும் உங்களைப் போன்றவர்கள்தான். காலை எழுந்து, கடன்முடித்து, சீருடை அணிந்து சிங்காரத்தோற்றம் பூண்டு, மிதிவண்டியேறி தோழர், தோழியரோடு உல்லாசம் பேசி, கல்லூரி சென்று கல்வி கற்றவர்கள் அல்லவா? இப்போது நீங்கள் உங்களை இவர்களிடம் இனங் காண்பீர்கள்.

இப்போது கண்களைத் திறந்து உங்களைச்சுற்றி என்ன நடக்கின்றது என்பதைப் பாருங்கள். புதிய காட்சிகள், அதற்கான புதிய கதை வசனங்கள். இவற்றினை உச்சரிக்கும் போருடையும் சிங்களவரின் வெள்ளைச்சீருடையையும் அணிந்த புதிய முகங்கள். இவை எல்லாமே உங்களுக்குப் புதியனவாகத் தோன்றக்கூடும். ஆனால், நீங்கள்தான் புதியவர்கள். மற்றவர்கள், மற்றவை யெல்லாம் மிகப்பழையனவே. நாள்தோறும் எங்கும் இவர்களால் எதிரொலிக்கப்படும் பயங்கரவாதிகளும் பயங்கரவாதமும், மக்கள் விடிவும் சுதந்திரக்காற்றுச் சுவாசிப்பும், அவர்களுக்கு இராணுவத் தீர்வும் உங்களுக்கு அரசியல் தீர்வும், சிவில் நிர்வாகமும் அபிவிருத்தியும், அமைதிப்பொதியும் தெரிவுக்குழுவும், சிங்களக் கட்சிகளிடையே ஒற்றுமையும் சர்வசன வாக்கெடுப்பும், தேர்தல்களும் உங்கள் பிரதிநிதிகளும், இவையெல்லாம் காலம் காலமாக இங்குமட்டுமல்ல,



உலகம் முழுவதுமே அவ்வப்போது அமைதி முகமூடிகள் அணிந்த ஆக்கிரமிப்பாளரால் அவிழ்த்துவிடப்படும் அடக்குமுறை இராணுவ, அரசியல் அகராதிகளில் காணப்படும் தொடர்களே.

"கூரையேறி கோழிபிடிக்க முடியாதவன், வானமேறி வைகுண்டம் போனானாம்." இப்படித்தான் இருக்கிறது இந்தக்கதை. தமது சொந்த நாடான சிறிலங்காவில் தறிகெட்டுச்செல்லும் அரசியல் வன்முறையை நிறுத்தி, அரசியல் அமைதியைக் கொண்டுவர முடியாதவர்கள், அதலபாதாளத்தை நோக்கி வேகமாகச் சரியும் சிறிலங்காவின் பொருண்மியத்தைத் தடுத்து நிலை நிறுத்த முடியாதவர்கள், வாழ்க்கைச் செலவு ஏற்றம் வேலையின்மை வன்முறை நிரம்பிய சூழலால் பாதிப்புற்று தற்கொலை செய்வதிலே உலகிலேயே சிறப்பிடம் பெற்று சொந்தப் பிள்ளைகளை – அனாதைப் பிள்ளைகளை அன்னியரின் நெறிகெட்ட பாலியல் வல்லுறவு வக்கிரகத்திற்கு இரையாக்கும் நிர்ப்பந்தத்திற்கு உள்ளான தமது சமூகச் சீரழிவைத் தடுக்க வக்கற்றவர்கள், பல்கலைக்கழகங்களிலே தீயாகப்பரவும் பெரும் அமைதியின்மையைத் தடுக்க முடியாதவர்கள், நாட்டின் கல்வித்துறை நாசமாகிப் போய்விட்ட நிலைகண்டு நாள்தோறும் ஒப்பாரி வைப்பவர்கள், இவை எல்லாவற்றிற்கும் திசை திருப்பலாக பேரினவாத உணர்வைத் தூண்டி தாம் ஆள்வதற்காகப் போரையே நம்பியிருப்பவர்கள், உங்களுக்கு என்ன சொல்கிறார்கள்? கல்விக்கடலிலே உங்களை மூழ்கடித்து, யாழ்ப்பாணத்தைச் சொர்க்கபுரியாக்கி, உங்களை வானவராக்கி, வளமுடன் வாழ வழி சமைப்பார்களாம். "இது ஆடு நனைந்தது என்று ஓநாய் அழுத கதையல்லவா?"

அப்படியானால், சிங்களம் ஏன் இப்படித் தோற்றம் காட்டுகின்றது, மாற்றம் இருப்பதாகக் கூறுகின்றது என நீங்கள் கேட்பது காதில் விழுகின்றது. அறிவியல் உலகின் மாணவ, மாணவிகளாகிய நீங்கள், "எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும், மெய்ப் பொருள் காணவேண்டும்" என்பதே எமது விருப்பமாகும். மீண்டும் கால வோட்டத்தின் முன்னைய பக்கங்களை நாம் புரட்ட வேண்டும். 75 வருடத்திற்கு உட்பட்ட வரலாற்றை ஒரே நேர்கோட்டில் பருந்துப் பார்வையில் பார்த்தால், "தொடர்ந்து ஏமாற்றியோரும் இடைவிடாது ஏமாந்தோரும்" என்றே பொருள் தரும். இதை இன்னமும் நீட்டினால், "தமிழர்கட்கு இன்னல்கள் உண்டு: அவை தீர்க்கப்படல் வேண்டும். உரிமைகள் உண்டு: அவை வழங்கப்படல் வேண்டும்" என ஒவ்வொரு காலகட்டத்திலும் அல்லது பொதுத்தேர்தலுக்கு முன்னரும் சிங்களத்தின் சகல தலைவர்களும் கூறியிருப்பதும் பின் தமிழ்த் தலைவர்களைப் பகடைகளாக்கி, பதவியைப் பிடித்து, அதை நிலைநிறுத்தியபின் தமிழரை மிக இளிவான முறையில் அடக்க முற்படுவதும் என்று விரியும் இதை இன்னும் விரிவாக்கினால், "நம்பிக் கெட்டோம்: ஏமாந்தோம், நட்டாற்றில்விட்ட நயவஞ்சகச் சிங்களத் தலைவரை நம்பி மோசம் போனோம்" என ஈற்றில் மரணப்படுக்கையில் வேதனையுற்று புலம்பி வரலாற்றின் பக்கங்களில் இருந்து காணாமல்போன தலைவர்களின் வரிசைகளைக் காண்பீர்கள்.

முன்னர் இது தொடர்கதை. புலிகள் தலைமை ஏற்றபின், இப்போது சிங்களவருக்கு இது விடுகதை. வெற்றுப் பேச்சுக்கள், பசப்பு வார்த்தைகள், வாக்குறுதிகள், பதவி ஆசைகள் எதனையும் காட்டி தமிழ்த் தலைமையை விலைக்கு வாங்க முடியாது என்றபோதே உதித்தது ஞானம் சந்திரிகா அம்மையாருக்கு. அதன்



1970 களை அண்டிய காலப்பகுதி அது. விடுதலைப் போராட்டம் கருக்கொண்ட நாட்கள் அவை. வேறுபட்டும், மாறுபட்டும் மக்கள் கூட்டம் மயங்கி நின்ற சூழல். ஆண்டாண்டு காலமாக அழுதும் தொழுதும் மண்டியிட்டும் மன்றாடியும் வாழ்ந்த இனத்தின் அவமதிப்பைத் தாங்காது, மனம்பொங்கி கொதித்து எழுந்தோரை நீங்கள் காண்பீர்கள். யார் இவர்கள்? தமிழ் இனத்தின் தன்மானச் சுமையைத் தாமாகவே தம் தோள்களில் ஏற்றி, மிக நீண்டதூரம் காவிச் சென்றவர்கள் இவர்கள். இவ் இளையோர்கள் உங்கள் முன்னோர்கள் அல்லவா? இவர்களில் உங்களை நீங்கள் காணவில்லையா?

# விடுகதையான வரலாறு

விளைவு தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வும் புலிகளுக்கு இராணுவத் தீர்வும் என்கிற மாயமர்மத் திட்டம். இதன்

> இன்று உறுதிமிக்க தலைமை உருவாகி, அதன் உணர்வோட்டமான போராட்டம் விரிவடைந்து வியாபிப்பது கண்டு வெகுண்டவர்கள், தமது முழுவளத்தையும் பலத்தையும் திரட்டி போர் புரிகையிலே நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? போராட்டத்திற்கு வலுச்சேர்த்து புதிய விடுதலை உலகிற்குள் பிரவேசிக்கப் போகின்றீர்களா? இல்லை எது நடந்தாலும் எமக்கு என்ன என இருந்து பழைய பாதையிலேயே பயணித்து, இருள்சூழ்ந்த அபாயகரமான வாழ்வையே தொடர்ந்தும் வாழப் போகின்றீர்களா?

பொருள், எல்லா வகையிலும் புலிகளையும் தமிழ் மக்களையும் பிரித்தல் என்பதாகும். அப்போதுதான் ஏற்கனவே விலைபோன ஏமாறிய தமிழ்க் குழுக்கள் என்ற பெயரில் உலாவரும் கூட்டமொன்றை மட்டுமன்றி, தமிழரையும் பின்னும் ஏமாற்றி ஏதோ ஒரு மாதிரியாகத் தனது பதவிக் காலத்தை ஒப்பேற்றி விடலாம் என்கின்ற நம்பிக்கை சிறிலங்கா ஜனாதிபதிக்கு. எனவே என்றென்றும் அரசியல் தீர்வு பற்றிய அதிரடிப் பேச்சுக்களும் இராணுவத் தீர்வுக்காக அழிவுப் போரும் தொடரும். ஈற்றில் அம்மையாரின் ஆட்சிக் காலம் முடிய பட்டை நாமம் பூசப்பட்ட நம்மவர்கள், "நம்பிக் கெட்டோம்" எனப்பாட, புதிதாக வரப்போகும் சிங்களத் தலைமை மீண்டும்

> ஏற்கனவே விலைபோன ஏமாறிய தமிழ்க் குழுக்கள் என்ற பெயரில் உலாவரும் கூட்டமொன்றை மட்டுமன்றி, தமிழரையும் பின்னும் ஏமாற்றி ஏதோ ஒரு மாதிரியாகத் தனது பதவிக் காலத்தை ஒப்பேற்றிவிடலாம் என்கின்ற நம்பிக்கை சிறிலங்கா ஜனாதிபதிக்கு. எனவே என்றென்றும் அரசியல் தீர்வு பற்றிய அதிரடிப் பேச்சுக்களும் இராணுவத் தீர்வுக்காக அழிவுப் போரும் தொடரும். ஈற்றில் அம்மையாரின் ஆட்சிக் காலம் முடிய பட்டை நாமம் பூசப்பட்ட நம்மவர்கள், "நம்பிக் கெட்டோம்" எனப்பாட, புதிதாக வரப்போகும் சிங்களத் தலைமை மீண்டும் பழைய பல்லவியை புதிய சுருதியில், "தமிழ் மக்களுக்குப் பிரச்சினைகள் உண்டு..... எனத் தொடர்ந்து....!"இதன் முடிவுதான் என்ன?

பழைய பல்லவியை புதிய சுருதியில், "தமிழ் மக்களுக்குப் பிரச்சினைகள் உண்டு...... எனத் தொடர்ந்து...... .!" இதன் முடிவுதான் என்ன? இதுவே நாம் எழுப்பும் கேள்வி. நாம் மிக்க உறுதியாகக் கூறக் காரணம் என்ன?



என்று கேட்கிறீர்களா? ஒன்றல்ல, சான்றுகள் ஓராயிரம் உண்டு. எமது வரலாறே இத்தகைய சான்றுகளால் நிரம்பி வழியும் வரலாறுதான்.



சிங்களத் தலைவர்கள் இலங்கைக்குச் சுதந்திரம் என்பது பற்றி வாயே திறக்காதபோது, அவர்களுக்காக வாதாடிய பொன் அருணாசலம், பொன் இராமநாதன் காலந்தொட்டு மென்மையாகப் பேசி இணக்கமாக நடந்த தந்தை செல்வா வரை, ஏன் தந்தை டி.எஸ். சேனநாயக்கா காலத்திலிருந்து அமைச்சரான பொன்னம்பலம், மகன் டட்லி சேனநாயக்கா காலத்திலே பணிந்து அமைச்சரான திருச்செல்வம் உட்பட எல்லோருமே தமது இறுதிக் காலத்தை விரக்தியோடும் ஏமாற்றப்பட்ட மனநிலையோடும் கழித்து தமது மரணப்படுக்கையில் கண்ணீர் சிந்தி நிம்மதியற்று மரணித்ததை நாம் மறக்கக் கூடிய வரலாறா? அல்லது ஆயுதப் போராட்டமே இறுதியும் தீர்க்கமுமான வழியென ஆரம்பித்து, இடைவழியில் ஆயுதங்களை ஒப்படைத்து, பின் ஒப்படைத்தவர்களிடமே கெஞ்சி ஆயுதங்களைப் பெற்று அரசியல் பிழைப்பு நடத்தி, இன்று தாம் எங்கே நிற்கின்றோம், என்ன செய்கின்றோம் என்பதையே அறியமுடியாத இருளில் தத்தளித்த கூட்டமொன்றையும் நீங்கள் நேரிலே காண்கிறீர்கள் அல்லவா? இப்போது சொல்லுங்கள் வரலாற்றின் வழிகாட்டலால் பட்டவிலையென்னும் பாடம் தந்த போதனைகளால் இன்று உறுதிமிக்க தலைமை உருவாகி, அதன் உணர்வோட்டமான போராட்டம் விரிவடைந்து வியாபிப்பது கண்டு வெகுண்டவர்கள், தமது முழுவளத்தையும் பலத்தையும் திரட்டி போர் புரிகையிலே நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? போராட்டத்திற்கு வலுச் சேர்த்து புதிய விடுதலை உலகிற்குள் பிரவேசிக்கப் போகின்றீர்களா? இல்லை



எது நடந்தாலும் எமக்கு என்ன என இருந்து பழைய பாதையிலேயே பயணித்து, இருள்சூழ்ந்த அபாயகரமான வாழ்வையே தொடர்ந்தும் வாழப் போகின்றீர்களா? ✳

**விடுதலைப் புலிகள்**
**மாணவர் அமைப்பு**

## எங்கிருந்தோ அழைக்கும்

என் கனவில் தெரியும் ஈழநாடு
தமிழர் மட்டும் வாழும் தனிநாடு
சேர்ந்திடுவோம் நாமும்..... ஓ.....
( என் )

வசந்தமும் அங்கே வந்ததெல்லாம்.......
தமிழர்கள் சிந்திய குருதியினால்
இனத்தின் மானம் காத்திடவே
சிங்கள வெறியரை எதிர்த்து நின்றார்
சிங்கள வெறியரை விரட்டிடவே
ஆயுதம் ஏந்தி களம் புகுந்தார்
வெறியர் கூட்டம் ஓடியதே
எம்மினம் அங்கே வாழ்ந்திடுதே
உழைத்திடுவோம் நாளும்...... (என்)

எங்கள் இனத்தை காத்து நிற்கும்
தம்பி படைகள் இருக்கும் வரை
எதிரிகள் கூட்டம் எதிர்ப்பதற்கே
அஞ்சி நடுங்கும் நிலையிருக்கும்
எம்மின மானம் காத்திடவே
உயிரைக் கொடுத்த தோழர்களே
உங்கள் கனவுகள் நனவாகும்
உங்கள் தியாகம் வென்றிடுமே
உழைத்திடுவோம் நாளும்......... (என்)

– கி.ச.ச. குமார்
சென்னை – 20

# தாயகம் நோக்கிய பயணம்

## முதலாம் பாகம்

### அத்தியாயம் பத்தொன்பது

(தொடர்ச்சி)

"பிறெடி..........பிறெடி.......பிறெடி............"ஏமாற்றமான தொனியில் கூறிக்கொணடே தனது சுங்கானைப் பற்ற வைத்துக் கொண்டார் சுதர்லாண்ட். பின்பு, "இவர்களைப் பயப்பிட வைக்கக், கூடிய எதையும் எம்மால் செய்ய முடியாது. இவர்கள் சித்திரவதைத் தடுப்பு முகாம்களில் இருந்து தேர்ச்சி பெற்றவர்கள். பேர்கன்–பெல்சனை ஞாபகம் இருக்கிறதா பிறெடி? அதைவிட மோசமானதாக எதையும் எங்களால் செய்ய முடியுமென நீ, நினைக்கிறாயா?" என்றார்.

பிறெடி கால்ட்வெல்லைத் தன்னோடு வரக் கேட்டுக் கொண்டது பற்றி மேஜர் அலிஸ்ரர் இப்போ கவலைப்படத் தொடங்கித் தன் குரலில் ஒரு வித சார்பும் பிரதிபலிக்காமலேயே அவர் சென்னார், "பிரிகேடியர், இங்குள்ள நாங்கள் எல்லோருமே போர் வீரர்கள். கராஓலொஸ்ஸில் எல்லாம் அமைதியாயிருப்பதாயும், கரைச்சல் ஏதாவது வரும் வரை வெறுமனே நாம் பார்த்துக்கொண்டிருக்கலாம் என்றும் உங்களுக்கு அறிக்கை தந்தால் அது ஒருவகை நேர்மையீனம் என்று நான் கருதுகிறேன்"

சுதர்லாண்ட் எழுந்து கைகளைப் பின்னால் கட்டியபடி, சிந்தனையோடு அறைக்குள் குறுக்கும், நெடுக்குமாக நடக்கத் தொடங்கினார். தனது சுங்கானைப் பலமுறை உறிஞ்சிப் புகையை விட்டு விட்டு, சுங்கான் குழாயைப் பல்லிலே தட்டியபடி, "இங்கு என்னுடைய கடமை, எமது அரசாங்கம் பலஸ்தீனப் பிரச்சினைக்கு என்ன செய்யலாம் என முடிவெடுக்கும் வரை, இங்குள்ள முகாம்களில் அமைதியைப் பேணுவதே. எமக்குப் பாதகமான பிரச்சாரத்தை ஏற்படுத்தக்கூடிய எதையும் நாம் செய்யக் கூடாது" என்றார்.

கால்ட்வெல் கோபமுற்றார். சுதர்லாண்ட் ஏன் சும்மா இருந்து கொண்டு யூதர்கள் பிரச்சினை ஏற்படுத்துவதைப் பார்த்துக் கொண்டிருக்கிறார் என்பது அவருக்குப் புரியவில்லை. அது அவருக்கு அப்பாற்பட்டதானதாயிற்று.

அலன் அலிஸ்ரர் அதைப் புரிந்து கொண்டாலும், அவரால் அத.தோடு ஒத்துப்போக முடியவில்லை. கராஓலொஸ்ஸில் யூதர்கள் போடும் எந்தத் திட்டத்தையும், குழப்பியடிக்கக் கூடிய விரைவான எதிர்த்திட்டம் ஒன்றைச் செயல்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தை ஆதரித்தார். ஆயினும், அவரால் செய்யக் கூடியதெல்லாம் கிடைக்கும் தகவல்களை சுதர்லாண்டுக்கு சமர்ப்பிப்பதே. இறுதி நடவடிக்கையான முடிவை சுதர்லாண்டே எடுக்க வேண்டும். அவருடைய அபிப்பிராயத்தில், சுதர்லாண்ட், காரண காரியத்துக்கு அப்பாற்பட்ட முறையில் மென்மையாக இவ்விடயத்தை கையாளுவதற்கு அவர் நினைத்தார்.

"வேறு ஏதாவது இருக்கிறதா?" பிரிகேடியர் கேட்டார்.

"இன்னும் ஒரேயொரு விடயம்." அலிஸ்ரர் தன்னுடைய ஆவணங்களைப் பரிசீலித்துக் கொண்டே சொன்னார் தொடர்ந்து, "அமெரிக்கப் பெண்ணான கத்தறின் பிறமென்றையும் செய்தியாளனான மார்க் பார்க்கரையும் பற்றிய அறிக்கையை பிரிகேடியர் படித்தாரா என அறிய விரும்புகிறேன்."

"அவர்களைப் பற்றி என்ன இருக்கிறது?

"அவர்களுக்குள் பிரத்தியேகமாக உறவு இருக்கிறதா என்று சரியாகச் சொல்ல முடியவில்லை. ஆனால் மார்க் பாக்கரின் சைப்பிரஸ் பிரவேசமும், அவள் கராஓலெகக்கு கடமைக்குப் போன சமயமும் ஒன்றாக இருப்பதுதான் சந்தேகத்தைக் கிளப்புகிறது. கடந்தகால அனுபவங்களின் அடிப்படையில் அந்த மார்க் பார்க்கர் பிரிட்டிஷாருக்கு எதிரான கருத்துக்களைக் கொண்டவன் என நினைக்கிறோம்."

"சே! குப்பைக் கதை. அவன் ஒரு திறமையான பத்திரிகையாளன். நூரம்பேர்க் விசாரணையின் போது உன்னதமாக வேலை செய்தான். ஹொலன்டில் ஒருமுறை நாங்கள் விட்ட முட்டாள்த்தனமான தவறை அவன் கண்டு பிடித்துப் பத்திரிகைக்குச் செய்தியளித்தான். அது அவன் தொழில்."

"அப்படியானால், கராஓலொஸ் முகாமில் நிகழ்வன பற்றி விசேட செய்தியொன்றைத் தயாரித்து வெளியிட பார்க்கருக்கு உதவும் முகமாகத்தான், திருமதி பிறமென்ற் அங்கு சேவையாற்றச் சென்றிருக்கிறாள் என்று நாங்கள் கருதுவது சரியாயிருக்குமா?"


"மேஜர் அலிஸ்ரர், உங்களை எப்போதாவது கொலைக் குற்ற விசாரணைக்குக் கொண்டுவந்தால், நீங்கள் இப்போ எனக்குச் சமர்ப்பித்துள்ளவை போன்ற சாட்சியங்களின் அடிப்படையில் யூரி சபையினர் ஒருபோதும் உங்களைத் தூக்கில் போடமாட்டார்கள்."

அலிஸ்ரரின் கன்னத்தில் சில இடங்கள் சிவந்து போயின.

இந்தப் பிறமென்ற் பெண், மத்தியகிழக்கிலேயே சிறந்த குழந்தை வைத்திய நிபுணி – சலோனிக்காவின் அனாதைக் குழந்தைகளின் காப்பகத்தில் அவள் செய்த சேவைக்காகக் கிரேக்க அரசால் பாரட்டப்பட்டிருக்கிறாள். அதுவும் உன்னுடைய அறிக்கையில் இருக்கிறது. மார்க் பார்க்கரும் அவளும் சிறு வயதிலிருந்தே நண்பர்கள். அதுவும் உன்னுடைய அறிக்கையில் இருக்கிறது. யூத நலன்புரிச் சபையினர் அவளைத் தேடி சேவையிலமர்த்தியதும் உன்னுடைய அறிக்கையில் இருக்கிறது. சொல்லுங்கள் மேஜர்....... உங்களுடைய அறிக்கைகளை நீங்களும் வாசிக்கிறனீங்கள் தானே?"

"ஆனால் சேர்"

நான் இன்னும் சொல்லி முடிக்கவில்லை. சரி, நாங்கள் உங்களுடைய மிக மோசமான மேற்கோள்கள் சரியான காரணங்களுடையவை என்றே வைத்துக் கொள்வோம். திருமதி பிறமென்ற், மார்க் பார்க்கருக்காகத் தகவல்கள் சேகரிக்கப் போகிறாள் என்றே எடுத்துக் கொள்வோம். மார்க் பார்க்கர் கராஓலெஸ் பற்றித் தொடர் கட்டுரை எழுதப் போகிறான் என்றே வைத்துக்கொள்வோம். அன்பர்களே, இது 1946 இன் முடிவுக் காலம். போர் முடிந்து ஒன்றரை வருடங்களாகி விட்டது. அகதிகளைப் பற்றிய கதைகளைப் பற்றி மக்கள் இப்போ அதிகம் கவலைப்படுவதோ, அது அவர்களை அதிகம் பாதிப்பதோ இல்லை. நாங்கள் இந்த அமெரிக்கத் தாதியையும் பத்திரிகையாளனையும் இப்போ சைப்பிரசை விட்டு வெளியேற்றினால், அதுதான் மக்களில் தாக்கத்தை ஏற்படுத்தும். அன்பர்களே! இந்தக் கூட்டம் இத்தோடு முடிகிறது.




அலிஸ்ரர் தன்னுடைய ஆவணங்களை விரைவாக ஒன்று சேர்த்துக் கொண்டார். இதுவரை தாளமுடியாத கோபத்தோடு இருந்து கொண்டிருந்த பிறெட் கால்ட்வெல் துள்ளியெழுந்து, "இந்த நாய்களில் சிலரைக் கொன்று இங்கு காரியங்களை நடத்துவது யார் என்று காண்பிக்க வேண்டும் என்று நான் சொல்கிறேன்" என்றார்.

"பிறெடி"

கால்ட்வெல் கதவை நோக்கித் திரும்பியிருந்தார்.

"அவ்வளவு ஆர்வம் உனக்கிருந்தால், உன்னைப் பலஸ்தீனத்துக்கு மாற்ற முடியும். அங்கிருக்கும் யூதர்கள் முட்கம்பி வேலிகளுக்குப் பின்னால் இல்லை, ஆயுதமும் ஏந்தியிருக்கிறார்கள். அவர்கள் காலைச் சாப்பாட்டுக்கு உன்னைப் போல் சிறிய மனிதர்களைத்தான் உண்கிறார்களாம்."

கால்ட்வெல்லும், அலிஸ்ரரும் மண்டபத்தினூடாக விறைப்பாக நடந்தனர். பிறெடி கோபமாக முணுமுணுத்துக் கொண்டிருந்தான்.

"என்னுடைய காரியாலயத்துள் வாருங்கள்" அலிஸ்ரர் அழைத்தார். பிறெடி ஒரு கதிரையுள் சரிந்து இருந்தவர், கைகளைச் சலிப்போடு மேலே வீசிக் கொண்டார். அலிஸ்ரர் ஒரு கடிதம் திறக்கும் கத்தியை மேசையில் இருந்து எடுத்து உள்ளங் கையில் தட்டியபடியே அறைக்குள் நடக்கத் தொடங்கினார்.

என்னைக் கேட்டால், "எங்களுடைய கிழட்டுப் பையனுக்கு நைற் பட்டத்தைக் கொடுத்து இளைப்பாற விடவேண்டும் எனச் சொல்வேன்" என்றார்.

அலிஸ்ரர் தனது மேசைக்குத் திரும்பி தன் உதடுகளைத் தயக்கத்தோடு கடித்துக் கொண்டார். "பிறெடி, நான் பல வாரங்களாக இதைச் சிந்தித்து வருகிறேன். சுதர்லாண்டோடு வேலை செய்வது கடினம். நான் ஜெனரல் ரெவர் பிறவுணுக்கு (Tevor Browne ) தனிப்பட்ட முறையில் கடிதம் எழுதப் போகிறேன். "அதுவும் மிகவும் ஆபத்தான வேலை நண்பனே" புருவத்தை உயர்த்தியபடி கால்வெட் கூறினார். "இந்த நாசமாய்ப் போன தீவு எமக்கெதிராக வெடிக்கும் முன்பு நாம் ஏதாவது செய்ய வேண்டும். நீ, சுதர்லாண்டின் உதவியாளன், நீ, என்னை நியாயப்படுத்தினால் எதிர் விளைவுகள் எதுவும் இருக்காது."

கால்ட்வெல்லுக்கும் சுதர்லாண்டோடு நிறைய முரண்பாடிருந்தது. அலிஸ்ரர் ரெவர் பிறவுணோடு திருமணம் மூலம் உறவு கொண்டவன். அவன் தலையை ஆட்டினான். "என்னைப்பற்றி நல்ல வார்த்தைகளை ரெவர் பிறவுணுக்குக் கூறுவாயல்லவா?"

கதவு தட்டப்பட்டதைத் தொடர்ந்து கோப்ரல் (Corporal) ஒருவன் புதிய தொகுதி ஆவணங்களுடன் உள்ளே வந்தான். அவன் அவைகளை அலிஸ்ரருக்கு கையளித்துவிட்டு வெளியேறினான். அலிஸ்ரர் அவைகளைப் பரிசீலித்துவிட்டு பெருமூச்சு விட்டான். "எனக்கு இருக்கும் பிரச்சினைகள் போதாதென்று இது வேறு, இந்தத் தீவில் நன்றாய் ஒழுங்கமைக்கப்பட்ட திருடர்கள் கூட்டமொன்று இருக்கிறது. அவர்கள் எவ்வளவு திறமையானவர்கள். அவர்கள் என்ன திருடுகிறார்கள் என்றே தெரியவில்லை" என்றார். ஜெனரல் ரெவர் பிறவுண், மேஜர் அலிஸ்ரருடைய பிரத்தியேகமானதும் அவசரமானதுமான செய்தியை சில நாட்களின் பின் பெற்றுக் கொண்டார். உடனடி உணர்வலைகளின்படி, கால்ட்வெல்லையும் அலிஸ்ரரையும் உடன் லண்டனுக்குத் திருப்பி அழைத்து, புரட்சி செய்வதற்காகக் குற்றம் சாட்ட வேண்டும் என நினைத்தார். ஆயினும், அலிஸ்ரர் பலமான காரணம் எதுவும் இல்லாமல் இப்படியான ஆபத்தான கடிதத்தை அனுப்பி இருக்க மாட்டான், என முடிவு செய்து கொண்டார். அலிஸ்ரருடைய அறிவுறுத்தலின்படி, கராஓலொஸ்சின் மீது விரைவான நடவடிக்கையை எடுக்க முடிவு செய்தால் அவர் மிக விரைவாக இயங்க வேண்டும். ஏனெனில், அவருக்குத் தெரியாமலிருந்தாலும், அரி பென்கானான் குழந்தைகளை கராஓலொஸ்சுக்கு வெளியே எடுத்துச் செல்லும் நாள், மணி, நிமிடத்தை ஏற்கனவே நிர்ணயித்திருந்தான்.

லார்நாகாவுக்கு அருகே அமைக்கப்பட்டிருந்த புதிய முகாம்கள ஆயத்தமாகிவிட்டதாகவும், நெருக்கடி மிகுந்த கராஓலொஸ் முகாம் வளாகங்களில் இருந்து, மேலதிக ஆட்களை லார்நாகாவுக்கு மாற்றும் வேலைகள் சிறிது நாட்களில் ஆரம்பமாகும் என்றும் பிரிட்டிஷார் அறிவித்தனர். அகதிகள் ஒரு நாளைக்கு 300–500 வரையான தொகையினராய் பத்து நாட்களில் அகற்றப் படுவார்கள் என அறிவித்தனர். அரி ஆறாவது நாளைத் தெரிந்து கொண்டான்.

சுரங்கமில்லாமல், பெட்டங்கள் இல்லாமல், குப்பைத்தொட்டிகள் இல்லாமல் அது நடக்கப் போகிறது. அரி சாதாரணமாக கராஓலொஸ்சுக்கு வாகனங்களை ஓட்டி வந்து, பிள்ளைகளை ஏற்றிக் கொண்டு வெளியே கொண்டு செல்லப் போகிறான். ✳

தொடரும்...

தங்கள் தாயகத்தை விட்டு அடித்துத் துரத்தப்பட்ட யூதமக்கள் 100க்கு மேற்பட்ட நாடுகளில் குடியேறியிருந்தார்கள். ஆனால் 2000 ஆண்டுகளாக, "அடுத்த செடார் திருநாளை ஜெருசலேத்தில் கொண்டாடுவோம்" என்ற வசனத்தை அவர்களது வருடாந்த செடார் பண்டிகையின் போது பிரார்த்தனையின் இறுதியில் கூறி வந்தார்கள்.

# யுத்த இழப்புப் பற்றிய சீர் செய்யமுடியாத சமன்பாடு

விழுந்தவர்கள் எல்லாம் விதையாகிப் போனதால்தான் விடுதலைக் போர் இன்றும் தொடர்கிறது.
– தமிழீழ தேசியத் தலைவர்

யுத்த களத்தில் இராணுவத்திற்கு ஏற்படும் இழப்புக்கள் குறித்து, பாதுகாப்பு அமைச்சு கைக்கொள்ளும் மதிப்பீடு பற்றிய சுவாரசியமான தகவல் ஒன்றைத் தொடர்புசாதன அதிகாரியொருவர் வெளியிட்டுள்ளார். இதில் அவர் யுத்த களத்தில் இராணுவ / புலிகள் இழப்புக் குறித்து ஒன்றுக்கு மூன்று என்ற விகிதாசாரம் கடைப்பிடிக்கப்படுவதாக தெரிவித்துள்ளார். அதாவது, ஒரு இராணுவத்திற்கு மூன்று புலிகள் கொல்லப்பட்டனர் என்ற விகிதாசாரத்திலேயே தகவல்கள் வெளியிடப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார். ஆனால், பாதுகாப்பு அமைச்சுக்கு இந்த வகையில் தகவல் வெளியிடுவதோ அன்றி இதற்கு ஏற்றவகையில் தகவல் வெளியிடுவதோ பெரிய விடயமல்ல. இராணுவம் முன்னேறிக் கொண்டு இருக்கிறதென்றும் மோதல்களின் போது இராணுவத்தினரின் இழப்புக்கள் தெரியாதிருக்கின்றது என்று கூறுவதும் புலிகளின் இழப்புக்களை வெளியிடுவதுமான ஆற்றல் பொருந்தியது சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு. ஆனால், பாதுகாப்பு அமைச்சு தெரிவிக்கும் இவ்வகையான அறிவிப்புக்கள், பெரும் முரண்பாட்டையும் மக்கள் மற்றும் தொடர்பு சாதனங்களுக்கு பெரும் குழப்பத்தையும் விளைவிப்பவையாகவே உள்ளன.

அதாவது, இராணுவம், புலிகள் முறையே ஒன்றுக்கு மூன்று என்ற ரீதியில் இழப்புக்கள் அறிவிக்கப்படும் போது புலிகள் குறித்த பாதுகாப்பு அமைச்சின் முன்னைய அறிவிப்புக்கள் பலவும் கேள்விக்குள்ளாகின்றன. குறிப்பாக புலிகளின் ஆளணி குறித்த பாதுகாப்பமைச்சின் அறிவிப்புக்கள் பெரும் முரண்பாட்டைக் கொண்டவையாகவே உள்ளன.

அதாவது, பாதுகாப்பு அமைச்சு புலிகளின் எண்ணிக்கை குறித்து வெளிமிடும் தகவலுக்கும் அவர்களது இழப்புக் குறித்த தகவலுக்கும் இடையில் சமன்பாடு காணக்கூடியதாக இல்லை. எடுத்துக்காட்டாக ஜெயசிக்குறுய் படைநடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட போது இராணுவத்தரப்பு 6000 பேர் வரையிலேயே புலிகள் இயக்கத்தில் உள்ளதாக அறிவித்தது. ஆனால், இன்று அவ் அமைப்பின் அறிவிப்பின்படி குறைந்தது 3500க்கும் அதிகமான புலிகள் கொல்லப்பட்டதோடு 7000க்கும் மேல் காயத்துக்குள்ளாகியுள்ளனர். அதாவது 6000 பேர் வரையிலேயே உள்ள புலிகள் இயக்கத்தில் 10500 பேர் வரையில் யுத்தத்தில் பாதிக்கப்பட்டுள்ளதாக தனது முன்னைய அறிவிப்புக்கு மாறான தகவல்களை பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ளது. இந்த நிலையில் விடுதலைப் புலிகளின் ஆளணி குறித்த இராணுவத்தினரின் மதிப்பீடு தவறானதா அன்றி புலிகளின் இழப்புக் குறித்த அறிவிப்பு பொய்யானதா? என்ற கேள்வி பொதுவாக மக்கள் மத்தியில் எழுவது தவிர்க்க முடியாதது. ஆனால், பொதுவாகவே இவ்விரண்டு மதிப்பீடுகளும் தவறானவையே ஆகும்.

இதேசமயம், சிறிலங்காப் பாதுகாப்பு அமைச்சின் இந்த அறிவிப்புக்கள், சிங்கள மக்களை மட்டுமல்ல கொழும்பில் உள்ள மக்கள் தொடர்பு சாதனங்களையும் குழப்பத்திற்கும் கேள்விக்கும் உள்ளாக்கி வருகின்றன. அதிலும் குறிப்பாக இராணுவ ஆய்வாளர்கள் பெரும் சங்கடத்திற்கும் தவறான மதிப்பீட்டிற்கும் வர வேண்டிய நிர்ப்பந்தங்களுக்கு உள்ளாகியுள்ளனர். இதனால் தாமும் தவறான கருத்துக்களைக் கொள்வதுடன், மக்களையும் தவறான முடிவுகளுக்குக் கொண்டுவந்தும் விடுகின்றனர். இந்த வகையில் சிறிலங்காப் பாதுகாப்பு அமைச்சு சிங்கள மக்களை முற்றாக ஏமாற்றுவதோடு மட்டுமல்ல, மக்கள் தொடர்பு சாதனங்களுக்கும் விமர்சகர்களுக்கும் அவப்பெயரை உருவாக்கி விடுகின்றது. ஆனால், சிறிலங்காவில் ஒன்று மட்டும் இன்று உணரப்பட்டதொன்றாக உள்ளது. சிறிலங்காப் பாதுகாப்பமைச்சு உண்மையே பேசுவதில்லை என்பதே அது. இதனை உணராதவர்கள் யாராவது இருப்பின், அவர்கள் யதார்த்தத்தை பகுப்பாய்வு செய்ய மறுக்கும் சிங்களப் பேரினவாதிகளாக மட்டுமே இருக்க முடியும்.

ஆனால் இப்பேரினவாதிகள் எவ்வாறுதான் கற்பனை செய்து கொண்டாலும், யுத்தத்தில் அவர்கள் இலக்குகள் ஈடேறப் போவதில்லை. ஏனெனில் யதார்த்தம் அவர்களுக்காக மாற்றம் கண்டுவிடப் போவதில்லை. ✳

**சிறிலங்காவில் ஒன்று மட்டும் இன்று உணரப்பட்டதொன்றாக உள்ளது. சிறிலங்காப் பாதுகாப்பமைச்சு உண்மையே பேசுவதில்லை என்பதே அது. இதனை உணராதவர்கள் யாராவது இருப்பின், அவர்கள் யதார்த்தத்தை பகுப்பாய்வு செய்ய மறுக்கும் சிங்களப் பேரினவாதிகளாக மட்டுமே இருக்க முடியும். ஆனால் இப்பேரினவாதிகள் எவ்வாறுதான் கற்பனை செய்து கொண்டாலும், யுத்தத்தில் அவர்கள் இலக்குகள் ஈடேறப் போவதில்லை. ஏனெனில் யதார்த்தம் அவர்களுக்காக மாற்றம் கண்டுவீடப் போவதில்லை.**

---

சிங்களப் பயங்கரவாதமானது எமது தேசிய ஆன்மாவில் விழுத்திய வடுக்கள் என்றுமே மாறப்போவதில்லை
*–தமிழீழத் தேசியத் தலைவர்*

## ''உண்மைகள் சுடும்''

# சிறிய உண்மைகளும் சமாதான தேவதை சந்திரிகாவைச் சுடுகின்றன

சிறிலங்காவின் உள்நாட்டுப் போர் நிலவரங்கள் குறித்து, வெளிநாட்டு வெகுஜனத் தொடர்பு சாதனங்களில் ஒரு பிரிவினர் தவறான செய்திகளை வெளியிடுவதாக, அண்மையில் கொழும்பில் பத்திரிகையாளர் மாநாட்டில் குற்றம் சாட்டப்பட்டது.

இவ்வாறு குற்றம் சாட்டியவர் வேறு யாருமல்ல. சிறிலங்காவின் ஜனாதிபதி சந்திரிகா என்பதைவிட அவர் குறிப்பிடும் தவறான செய்திகள் எதுவென்பதே இங்கு முக்கியமானது.

ஐ.தே.கட்சி அட்சிக்காலத்தில் கொடிய அடக்குமுறை போரினால் நொந்து போயிருந்த மக்கள் மத்தியிலே தன்னைச் சமாதான தேவதையாகக் காட்டிக் கொண்டு புறப்பட்டவர்தான் சந்திரிகா.

"வன்முறையில் தகப்பனை இழந்தவள்: கணவனை இழந்தவள். எனவே கொடூர முகம் காட்டும் போரின் வடுக்களை நான் நன்கு உணர்வேன். போரினை நிறுத்துவேன். சமாதானத்தை ஏற்படுத்துவேன்" என்று, பிரச்சாரப் போரில் முதலைக் கண்ணீர் வடித்து அதிகப்படியான வாக்குகளால் வெற்றி பெற்று பதவிக்கு வந்தவர்தான், அன்றைய சமாதானத் தேவதை– இன்றைய பேரினவாதி சந்திரிகா.

ஆனால் இன்று நடப்பது என்ன? சந்திரிகாவின் புண்ணியத்தால் எத்தனை தமிழ்ப் பெண்கள் கணவனை இழந்துவிட்டார்கள். எத்தனை தமிழர்கள் தாய், தகப்பன், பிள்ளைகள், உற்றார் உறவினர்களை இழந்துவிட்டனர்.



விமானக் குண்டுவீச்சின் மூலமும் எறிகணைத் தாக்குதல் மூலமும் கொல்லப்பட்ட கை, கால், கண்கள் இழந்த தமிழ் மக்கள்தான் எத்தனை பேர். அழித்தொழிக்கப்பட்ட தமிழர் சொத்துக்கள்தான் எத்தனை கோடிகள்.

புழுகித் தள்ளுவதில் மாத்திரம் முதன்மைபெற்றுவிட்ட இராணுவப் பேச்சாளர் சரத்முனசிங்க, கொல்லப்படும் தமிழர்களையெல்லாம் போராளிகளாகக் காட்டி, தானும் மகிழ்ந்து தன் இராணுவத்தினரையும் மகிழ்விப்பது எதனால்?

நவாலி தேவாலயத்தில் இருந்து நாகர்கோயில் பாடசாலை, வவுனிக்குளம் தேவாலயம் என்று தொடராகவே தமிழர் சதைப்பிண்டங்கள் ஆக்கப்பட்டபின் கணக்குக் காட்டும் அவலத்தை எந்த வகையில் சேர்ப்பது?

"சமாதானத்திற்கான போர்" என்ற புதிய கோசம் ஒன்றைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு, தமிழ் மக்களின் வாழ்வினை இல்லாதொழித்து அவர்களைக் காடுகளுக்கு விரட்டி, மர நிழலிலும் மழையிலும் வெய்யிலிலும் வாடச் செய்துவிட்டு, மருந்துத் தடைகளோடு பொருண்மியத் தடைபோட்டு, பதப்படுத்துதல் எதனால்?

தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள அடக்குமுறைகளினால் அவர்கள் சாதாரண மனிதருக்குக் கிடைக்க வேண்டிய அடிப்படை வசதிகள் கூட இன்றி இம்சைப் படுவதுதான் உண்மை. இதில் ஒரு சதவீதம் மாத்திரமே எப்படியோ கசிந்து, வெளிநாட்டுத் தொடர்பு சாதனங்களுக்குக் கிடைக்கின்றன.

இந்த ஒரு சதவீத உண்மைகள் கூட, சந்திரிகாவைக் கோபப்படுத்துகின்றன என்றால் அதற்குக் காரணம் என்ன?

"உண்மைகள் சுடும்" என்று பெரியார்கள் என்றோ சொல்லி வைத்துள்ளனர் அது தான் காரணம்! ✳

# பட்டினிச் சாவில் வன்னிமக்கள்

வன்னிப்பகுதி மக்கள் தமது ஜீவனோபாயத்துக்குரிய உயிர்நாடியாக விவசாயத் தொழிலை மட்டுமே கொண்டுள்ளார்கள். போர் முனைப்பின் பல்வேறு நெருக்கடிகளுக்குள் தொடர்ச்சியாகச் சிக்கியுள்ள இவர்கள், தற்போது மரணத்தை நோக்கிய ஒரு பயணத்தில் வலிந்து தள்ளப்பட்டுள்ளார்கள்.

குளங்களும், வயல்களும் இவற்றோடு இணைந்த காட்டுப்பாங்கான வன்னிப்பகுதி மக்கள் விவசாயத்தோடு, இயற்கையோடு இணைந்து கனிகள், காட்டு மிருகங்கள், மீன் மற்றும் சுய உற்பத்தியின் மூலம் கிடைக்கும் உணவுகளையே உண்பது வழக்கம். வடக்கின் நெற்களஞ்சியமாக வன்னியின் கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்கள் திகழ்ந்தன.

இனப்பிரச்சனை காரணமாக தீவிரமடைந்த போரும் இராணுவ நடவடிக்கைகளும் பல்வேறு தடைகளையும் கஸ்ரங்கள் நெருக்கடிகளையும் வன்னி மக்கள் மீது கவிந்த போதிலும் 1992ஆம், 1993ஆம் ஆண்டுவரையும் வன்னிப் பகுதிக்கு வெளிமாவட்டங்களில் இருந்து அரிசியைக் கொண்டுசெல்ல வேண்டிய தேவை ஒருபோதும் எழுந்ததில்லை.


தொடர்ச்சியான பொருளாதாரத் தடையும் டீசல், பெற்றோல் போன்ற அத்தியாவசிய எரிபொருள்கள் மீது போரைக் காரணம் காட்டி கடுமையான தடை விதிக்கப்பட்டது. மின் விநியோகமும் துண்டிக்கப்பட்டது.

டீசல், பெற்றோலுக்குப் பதிலாகவும் மாற்றீடாகவும் மண்ணெண்ணெய்யே முழு அளவில் அங்கு பயன்படுத்தப்பட்டது. கார்கள், லொறிகள், மோட்டார் சைக்கிள்கள் எனப் பல்வேறு வாகனங்களும் மண்ணெண்ணெய்யையே முழு எரிபொருளாகக் கொண்டு ஓடத்தொடங்கின. இப்போதும் ஓடிக்கொண்டிருக்கின்றன. பெற்றோலைப் பயன்படுத்தும் கார்கள், மோட்டார் சைக்கிள்கள் என்பன மிகவும் தட்டுப்பாடான பெற்றோலை பன்மடங்கு அதிகவிலை கொடுத்து பெற்று மருந்தினைப் பயன்படுத்துவது போல ஒருசில துளிகளை மிகவும் தொழில் நுட்பத்தோடு பயன்படுத்தி இவ்வாகனங்களின் இயந்திரங்களை இயக்குகின்றனர். பெற்றோலுக்கு மாற்றீடாக 'ஓடிக்கொலோனை'யும் பலர் பயன்படுத்துகிறார்கள். இதனைக் கேள்வியுற்ற இராணுவம் ஓடிக்கொலோனையும் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்குள் அனுமதிப்பதைத் தடைசெய்து விட்டது.

இதனால் போக்குவரத்து என்பது கஸ்டம் நிறைந்ததாகவும் பன்மடங்கு செலவுமிக்கதாகவும் மாறியது. பொதுவாக ஒரேயொரு போக்குவரத்து வாகனமாக சைக்கிள்களே மக்களால் பயன்படுத்தப்பட்டன. இவற்றின் மீதும் இராணுவத்தின் கவனம் திரும்பியதையடுத்து, சைக்கிள் ரயர், ரியூப்கள் முதல் உதிரிப்பாகங்களும் தடை செய்யப்பட்டன.

தேய்மானங்களுக்கு உள்ளாகிய உதிரிப்பாகங்களுக்கு மாற்றீடாக புதிய உதிரிப்பாகங்களை பெறமுடியாத நிலையில் பழுதடைந்த சைக்கிள்களின் தொகை அதிகரிக்க, அதிகரிக்க 4 அல்லது 5 சைக்கிள்களின் உதிரிப்பாகங்களைக் கொண்டு ஒரு ஓடக்கூடிய சைக்கிளை உருவாக்குகிறார்கள். அவ்வப்போது ஏதோ ஒருசில சந்தர்ப்பங்களில் அனுமதிக்கப்படுகின்ற சைக்கிள் ரயர் ரியூப்களே பாவனையில் பயன்படுகின்றன. தேய்ந்து நாராகி இனிமேலும் இயலாது என்ற இறுதி நேரம் வரையும் விடாமல் ரயர் ரியூப்களை மக்கள் பயன்படுத்துகிறார்கள்.

இதேவேளையில், இராணுவத்துக்கு எதிரான கண்ணிவெடித் தாக்குதலுக்கு அவசியமான வெடிபொருளைத் தயாரிப்பதற்கு 'யூரியா' பசளையைப் புலிகள் பயன்படுத்துகிறார்கள் என்று யாரோ ஒரு கெட்டிக்காரன் மேற்கொண்ட கண்டு



பிடிப்பை அடுத்து, ஆட்டிலறி, பீரங்கி போன்ற கனரக ஆயுதங்களையும் விமானங்களைத் தாக்கியழிக்கும் ஏவுகணைகளையும் புலிகள் பயன்படுத்தி வருகின்ற இந்த வேளைவரையும் 'யூரியா' பசளைக்கு விதிக்கப்பட்ட தடை இன்னமும் நீக்கப்படவில்லை. அதுமட்டுமல்ல, யூரியாவுக்குப் பதிலாக முழுஅளவில் விவசாயிகளால் பயன்படுத்தப்பட்டுவந்த ரீ.டீ.எம் என்ற பசளையையும் பாதுகாப்புத்துறை அதிகாரிகள் தடைசெய்துவிட்டார்கள். அத்துடன் இரசாயனப் பொருள்களையும் விவசாயிகளுக்காகக் கொண்டுசெல்ல முடியாத நிலைமையை இராணுவம் ஏற்படுத்தியது.

உழவு இயந்திரங்களுக்குரிய உதிரிபாகங்களையும் பெறமுடியாத நிலையில் மாடுகளைக் கொண்டு உழவு வேலைகளைச் செய்துவரும் விவசாயிகள், நவீன விவசாய முறைகளைக் கையாள முடியாமல் பழங்கால முறைகளைக் கடைப்பிடித்ததன் மூலம் படிப்படியாக கடந்த சில ஆண்டுகளாக விவசாய முயற்சிகள் குறைந்து சென்று கொண்டிருக்கின்றன.

ஜீவனோபாயத் தொழிலான விவசாயத்துக்குரிய நிலப்பகுதிகளும், கிளிநொச்சி மீதான இராணுவ நடவடிக்கைகளினாலும் இப்போதைய ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கைகளினாலும் அளவில் சுருங்கிச் செல்கின்றன. நாளாந்தம் இடம்பெயர்ந்து அகதிகளாவோரின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. உணவு உற்பத்தியில்லை. தொழில் முயற்சிகள் இல்லை. இந்த நிலையில் பெருமளவு மக்கள் உணவுக்கு வழியின்றி சிறிலங்கா அரசு வழங்கும் நிவாரண உணவுப் பொருட்களை மட்டும் நம்பி உயிர்வாழ வேண்டிய நிலைமை இப்போது உருவாகியுள்ளது. இதுவும் படிப்படியாக அதிகரித்து வருகின்றது.

இந்த நிலைமையில் குழந்தைகள் சிறுவர்களின் ஊட்ட வளர்ச்சிக்கு அவசியமான அடிப்படை உணவுகளையும் மருந்துகள் என்பவற்றையும் பெறமுடியாத நிலையில் பலரும் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். பாலூட்டும் தாய்மார்களுக்கு அவசியமான ஊட்டச் சத்துக்கள் இல்லாமையால் ஆரோக்கியமுள்ள குழந்தைகளை வளர்க்கமுடியாமல் அவர்களும் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இதற்கிடையில் பல ஆண்டுகளாக முறையாகவும் தொடர்ச்சியாகவும் நுளம்புகளை அழித்து மலேரியா நோயைக் கட்டுப்படுத்துகின்ற தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாததனால் மலேரியா பெருமளவில் பரவி மக்களை மிக மோசமாகத் தாக்கி வருகின்றது. தூய குடிநீரும், சீரான உறைவிடங்களும் அடிப்படை சுகாதார வசதிகளும் இல்லாத நிலையில் பல்வேறு தொற்று நோய்களுக்கும் ஆளாகி உள்ளார்கள் வன்னி மக்கள்.

போசாக்கின்மையால் பாதிக்கப்பட்ட மக்களை நோய்கள் பீடித்து உலுக்குகின்றன. முறையான வைத்திய வசதிகளும் தாராளமாக இல்லை. நோய்த்தாக்கங்களுக்கு ஈடுகொடுக்கக்கூடிய வலிமையான மருந்துப் பொருள்களுக்கு நிரந்தரத் தடை விதிக்கப்பட்டுள்ளது. சாதாரண மருந்துகளே, வரையறைகளுடன் அனுமதிக்கப்படுகின்றது. வன்னியின் நோய்த்தாக்கங்களைக் கட்டுப்படுத்தவும் நோய்களைப் பெருகவிடாமல் தடுக்கவும் அங்குள்ள குறைந்த எண்ணிக்கையினரான வைத்தியர்கள் ஆளணியினரால் (இந்த மருந்துகளைக் கொண்டு) முடியவில்லை.

முதியவர்களுக்கு மிகவும் முக்கியமான அரவணைப்பும் பராமரிப்பும் கவனிப்பும் இல்லாததனால் நோய்களோடு போராடியவாறு வீதிகளில் வயிற்றுப்பாட்டைத் தேடி கையேந்திய நிலையில் பலர் அலைந்து திரிவதாக அண்மையில் அப்பகுதிக்கு விஜயம் செய்துவிட்டுத் திரும்பியுள்ள கிறிஸ்தவ தலைவர்கள் அடங்கிய குழு தெரிவித்துள்ளது.

இராணுவ நடவடிக்கைகளினாலும் தொடர்ச்சியான அகோரமான சண்டைகளினாலும் நேரடியாக மக்கள் பாதிக்கப்படுவதனால் கணவனையும் உற்ற துணைகளையும் இழந்து தவிக்கும் பெண்களும் சிறுவர்களும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். முதியவர்கள் இளைஞர்களும் கூட இதற்கு விதிவிலக்கல்ல. மொத்தத்தில் வன்னிப் பகுதியில் உயிர்வாழும் முழுச் சமூகமுமே போர் நெருக்கடிகள் காரண்மாக, ஆழமான மனக்காயங்களுக்கும் மீட்சிபெற முடியாத உளவியல் தாக்கங்களுக்கும் ஆளாகியுள்ளது. எதிர்காலச் சந்ததியினரையும் சமூகத்தையும் அபாயகரமான முறையில் இந்த நிலைமைகள் பாதித்து வருவதாக அக்குழுவினர் மேலும் அபாய அறிவிப்புச் செய்துள்ளார்கள்.

இவையனைத்தையும் சந்தேகத்துக்கு இடமின்றி உறுதிப்படுத்துவதுபோல கிளிநொச்சி மாவட்டத்தின் ஜெயபுரம் பகுதியில் உள்ள இரண்டு கிராமங்களில் ஏற்பட்டுள்ள நிலைமைகள் அமைந்துள்ளன.

கடந்த சுமார் 25 தினங்களில் இப்பகுதியில் 13 பேர் பரிதாபகரமான முறையில் உயிரிழந்துள்ளார்கள். பத்துமாதப் பச்சிளம் குழந்தை முதல் 50 வயது வயோதிபர்கள் வரையில் போசாக்கின்மையாலும் நோய்த்தாக்கங்களினாலும் உரிய வைத்திய வசதிகள் சரியான நேரத்தில் கிடைக்காததனாலும் அவர்கள் மாண்டு போனார்கள்.

ஜெயபுரத்தைச் சேர்ந்த கோபி குடியிருப்பு, விநாயகம் குடியிருப்பு ஆகிய கிராமப்பகுதிகளிலேயே இந்த அவலம் நிகழ்ந்துள்ளது.

கோபி குடியிருப்பில் குடியிருக்கும் 246 குடும்பங்களும் விவசாயத் தொழில்களை மேற்கொள்ள முடியாமல் தொழிலின்றி வெறும் நிவாரணத்தை நம்பியே உயிர் வாழ்கின்றனர். போசாக்கின்மையால் பாதிக்கப்பட்ட இவர்கள், நோய்கள் தாக்கிய உடனேயே வைத்திய பராமரிப்பு பெறமுடியாதவர்களாக உள்ளனர். ஆறு மைல் தூரத்திலுள்ள வைத்தியசாலைக்கு கால்நடையாகவே செல்லவேண்டும். போக்குவரத்து வசதியில்லை. கையில் பணமும் இல்லாத நிலையில் வறுமை வாட்டுகின்றது. இந்தநிலையில் ஏழு பேர் அநியாயமாக உயிரிழந்தார்கள். உயிரிழந்தவர்களில் இரண்டு பத்துமாத பச்சிளம் குழந்தைகளும் இடங்கும்.

விநாயகம் குடியிருப்பில் 5பேர் உயிரிழந்தார்கள். உயிரிழந்தவர்கள் காய்ச்சல் குணத்துடன் கூடிய நோயினால் பாதிக்கப்பட்ட இரண்டு மூன்று தினங்களிலேயே மரணமாகியுள்ளனர்.

நோயினால் பாதிக்கப்பட்டு இறந்த தனது குழந்தையை அடக்கம் செய்வதற்கு அவசியமான செலவுக்கு பணமில்லாத தந்தை ஒருவர் பட்டபாடு மனதைத் துடிக்கச் செய்யவல்லதாக உள்ளது.

குழந்தை இறந்துகிடக்க, வழியற்ற நிலையில் வாடிய தந்தைக்கு, நிவாரணப் பொருள் வழங்கப்படும் செய்தி எட்டுகின்றது. ஓடோடிச்சென்று வரிசையில் நின்று பெற்ற உணவுப் பொருள்களைப் பணத்துக்கு விற்று கிடைத்த கொஞ்சநஞ்சப் பணத்தை கொண்டு குழந்தையின் இறுதிக் கிரியைகளை ஒப்பேற்றி முடித்தார்.

இரண்டரை வயது கொண்ட தனது குழந்தையை காய்ச்சலுக்குப் பலி கொடுக்கக் கூடாதென்று, போசாக்கின்மையால் நலிவுற்ற நிலையிலும் குழந்தையைத் தூக்கிக்கொண்டு சுமார் ஆறு மைல் தூரத்தை கால்நடையாகச் சென்று வைத்தியசாலையை அடைந்த போது, துவண்டுகிடந்த குழந்தை நிரந்தரமாகவே உறங்கிவிட்டது.

மனதை உருகச் செய்கின்ற இவ்வாறான பல சோக நிகழ்வுகள் வெளிச்சத்துக்கு வராமலும் உள்ளன. அழிவை நோக்கி நகரும் வன்னி மக்களை ஆட்கொள்ளப் போவது யாரோ?

நன்றி: வீரகேசரி

**தன் குழந்தையை காய்ச்சலுக்கு பலிகொடுக்கக் கூடாதென்று ஆறு மைல் தூரம் நடந்து வைத்தியசாலையை அடைகின்றவேளை, குழந்தை தன் தந்தையின் கையிலேயே நிரந்தரமாக உறங்கிவிட்டது!**

# சிறுகதை




அன்றும் வழமைபோலவே விடிந்தது. ஆனாலும் முகங்களில் வழமையைவிட ஏதோ ஒரு மாறுதல் தெரிந்தது. சேவல் கூவியது. ஏழு தேவதைகள் எனப்பட்ட புளுணிகள் ஆரவாரித்தன. இன்னும் பெயர் தெரியாத குருவிகள் இன்னிசைக் கானங்களை எழுப்ப, பசு ஒன்று பால் கறக்க எஜமானை அழைத்தது. ஆனாலும், ஏதோ ஒரு மாறுதலான நாளின் ஆரம்பம் என்றே மனம் சொல்லிக்கொண்டிருந்தது.

ஒரு சில நாட்களாகவே தொலைந்து போய் விட்டதாகக் கருதும்படி காணாமற் போயிருந்த ஆதவன், கீழ் வானைச் சிவக்கப் பண்ணியவாறு எழுந்து கொண்டிருந்தான்.

அப்போதும் இலைகள் அசையும் போதெல்லாம் நீர்த்துளிகள் மண்ணை நோக்கிப் பாய புல்லின் இதழ் நுனிகள் அவ்விளஞ் சூரிய ஒளியில் மின்னும் நீர்த்துளிகளைச் சுமந்தவாறு இருந்தன. நிலமோ இன்னும் சேறாகவே இருந்தது.

மனைவி எனக்கு முன்பே எழுந்து தேனீர் தயாரித்தது மட்டுமல்லாது, என்னையும் எழுப்பி கீடன்கள் முடித்து வருமாறு கட்டளை இட்டதன் பயன்தான், நான் இரசிக்க முடிந்த மழைக்காலக் காலைக்காட்சி.

தேனீர் அருந்தி முடிந்ததும் உடைகளை மாற்றிக்கொண்டு தெருவிற்கு இறங்கி எனது துவிச்சக்கரவண்டியை மிதிக்கத் தொடங்கினேன். வீதிகள் சேறாகவும் குன்று குழிகள் எல்லாம் நீர் நிறைந்தும் அலங்கோலப்பட்டிருந்தது. நெழிந்து, வளைந்து சாகசம் செய்வதுபோல ஒருவாறாக சென்றுகொண்டிருந்தேன். விசுவமடுச் சந்திக்கு சற்று அப்பால் பிரதான வீதியை மூடியபடி வெள்ளம் பாய்ந்து கொண்டிருந்தது.

தனியார் கல்வி நிறுவனத்துக்குப் போய்க்கொண்டிருந்த மாணவியர் சிலர், முகம் சிவக்க நீரூடாகத் தமது வண்டிகளை உருட்டியபடி வந்து, திரும்பி கோபமாக ஒரு பார்வையை எறிந்துவிட்டு விர் என விரைந்தனர். அப்பால் நீருக்கருகில் நின்ற சில இளைஞர்கள், ஏதோ பகிடி விட்டிருக்க வேண்டும் என்பது உடனே புரிந்தது. நீரைக் கடந்துபோக முயல்கையில் "அப்பு! சோக்கிலை தண்ணிபட்டால் கஸ்ரம்: தூக்கிக்கொண்டு போங்கோ" என்று யாரோ ஒருவன் கூற,



மற்றயோர் சிரித்தனர்.

'காவாலியள்' என்று மனதுக்குள் திட்டியபடி அப்பாலே சென்று, பயணத்தைப் பொன்னம்பலமண்ணர் வீடு நோக்கித் தொடர்ந்தேன். சிந்தனை சென்ற வாரம் நோக்கிச் சிறகடித்தது. . .

"எடே கண்கெட்ட கடவுள்: கிணறுகள் வரண்டுபோச்சு. மழை. . . ? ஊகூம். . . . அறிகுறியே இல்லை. காலம் கெட்டுப்போச்சு. அறுந்த கடவுள்" என்று திட்டியபடி இருந்தார் பொன்னம்பலமண்ணர்.

பொன்னம்பலமண்ணை வித்தியாசமான ஒரு ஆண். கோண்டாவிலிலை, பிறந்து வளர்ந்து வாழ்ந்த ஊராகக் கொண்டவர். யாழ்ப்பாணம் பலாலி வீதியில் வரும் ஒருவர் அவரது வீடெது என்று விசாரித்தால், உடனேயே அடையாளம் காட்டிவிட ஒரு சிறுவனாலேயே முடியும். அந்தளவுக்கு பிரபலமாகக் காரணம், அவர் முழுநேர விவசாயியாகவும் இல்லாமல் முழுநேர வியாபாரியாகவும் இல்லாமல் காலத்திற்கேற்ப தன்னை மாற்றி அமைத்துக் கொண்டமை யேயாகும்.

"கோண்டாவில் பிரதேசத்தில் சிறந்த விவசாயி யார்? அப்பிரதேசத்தில் சிறந்த புகையிலைச் சுருட்டு விற்பனையாளர் யார்?"என்ற கேள்விகளுக்கு ஏகோபித்த விடையாக அமையப் போவது அவரின் பெயராகவே இருக்கும்.

குறை என்று சொல்ல எதுவுமே இல்லை. நிறைவான குடும்பம். மூத்த மகன் காலத்தின் கோலத்தால் கனடாவில். மகள் ஒருத்தி யேர்மனியில் வாழ்க்கைப்பட்டதால் அங்கேயுள்ளாள். மற்றொரு மகள் நோர்வேயில். ஊரிலே அவரும் மனைவியும் இளைய மகனும் மூத்த மகள் குடும்பமும் தான்.

நிறைவான அவரது வாழ்க்கையில் சோதனை ஆரம்பித்தது தொண்ணூற்றி யொன்றில்தான். விமானக் குண்டு வடிவிலே வந்த காலன் மனைவியைக் கவர, வீடும் நொருங்கி கற்குவியல் போலாகியது. திகைத்துப்போனாலும், சமாளித்துக் கொண்டார். இந்தக் காலப் பகுதியில் இளையவன் குமணன் காலத்தின் தேவை கருதி தன் பங்களிப்பைச் செலுத்தச் சென்றுவிட்டான். பொன்னு அண்ணருக்கு மகனை எண்ணிக் கவலைதான். ஆனாலும் அவன் தன்னையும் காலத்தையும் வீணாக்கவில்லை. பயனுள்ள பணியில்தானே தன்னை இணைத்துள்ளான் என தன்னைத்தானே தேற்றியபடி மகன் குடும்பத்துடன் இருந்தார்.

இத்தனைக்கும் அவர் கலங்கவில்லை என்றால் அதற்குக் காரணம், அவரது பொதுக்கண்ணோட்டமே. ஏனென்றால், தமிழனாக அதுவும் தமிழீழத்தில் உள்ளவனுக்கு சோதனைகள் வரும் என்பது அவருக்குத் தெரியும். சோதனைகளை வெல்லும் வழியும் தெளிவாகத் தெரியும். ஆகவே கலங்கவில்லை.

சோதனைகளை வெல்லுவதற்காக வேண்டியவற்றை செய்ய, அவர் எப்போதுமே தயங்கியது கிடையாது. தென் தமிழீழத்தால் தொண்ணூறுகளிலும் அதற்கு முன்னரும் வந்தவர்களுக்கு எராளமான உதவிகள் செய்தார். ஆரம்ப காலம் முதல் இவரது வீட்டிற்குப் போராளிகள் போய் வருவது வழமை. அவர்களுக்கும் தேவை உணர்ந்து அவர் உதவி செய்யப் பின்னிற்பதில்லை. மூத்தவன் குகன் கனடாவிலிருந்து இவருக்குக் காசு அனுப்புவது நின்றபோது, "அவன் அகதிகள் புனர்வாழ்விற்காக தனது உழைப்பைச் செலவிடுகின்றான்" என்று யாரோ இவரின் காதில் போட்ட செய்தியால் அவர் பெருமைப்பட்டுக் கொண்டார். "காசு எனக்குத் தேவையானது கிடக்கு: அவன் தம்பி விரும்புகிற மாதிரிச் செய்யட்டும். பயனுள்ளதாய் செய்தால் சரி" என்பதே, மகனைப்பற்றி கூறியோருக்கு அவர் சொன்ன பதிலாக இருந்தது.

காலச் சுழற்சி, வலிகாமத்தால் வெளியேறி கிளிநொச்சி தர்மபுரத்தில் தனது வியாபார நண்பரின் காணியில் குடிசைபோட்டு இருக்கும் அளவிற்கு அவரைத் தள்ளிவிட்டது.

நெத்தலி ஆற்றுக்கு அண்மையிலான தனது குடிசையில் மகள், மருமகன், பேரப்பிள்ளைகள் என உறவுகளுடன் நீட்டி நிமிர்ந்து படுக்க எழும்பமுடிகிறதே என்பதிலும் மூன்று வேளையும் குறைவிலாத உணவு உண்கிறோமே என்பதிலும் மனம் நிறைந்தவராக, முன்போலவே தனது பகிடிக் கதைகளுடன் வங்கியால் எடுத்த பணத்தை, கஸ்ரப்படுவோருக்கு கொடுத்துக் கொண்டி ருக்கிறார்.

நெத்தலி ஆற்றுப் பாலத்தில் ஆட்கள் குழுமி நின்று சத்தமாக கதைத்துக் கொண்டிருந்தும் அவர்களைப் பார்த்தபடியே சிந்தனையில் இருந்தாலும் எதிரே வந்த வாகனம் என்மீது தெருக்குழியில் இருந்த தண்ணீரை அடிக்கும் என்பதை எதிர் பாராமல் வாகனத்துக்கு வழி விலகியபோது, சேற்று நீரால் அபிடேகம் ஆகியபோது முற்றாக முழுப் புலனையும் என்னை நோக்கி இழுக்கவேண்டியதாயிற்று. அத்தோடு பொன்னம்பலத்தாரின் கடந்த கால நினைவுகள் நின்றுபோக, நெத்தலி ஆற்றுப்பாலத்தில் நின்று கீழே நுரைத்துப் பொங்கிப் பாயும் ஆற்றைப் பார்த்துவிட்டு அப்பாலே சென்றேன்.

துவிச்சக்கர வண்டியை தெருவிலேயே விட்டுப் பூட்டிய பின், வெள்ளத்துடன் அவரின் காணி நோக்கிச் செல்ல முயன்றபோது, அவர் என்னைக் கண்டுகொண்டு விட்டார்.

"ஏய்! செல்லையா உதிலை கிடங்கு கிடக்கு: சேறும் கிடக்கு. உங்கை நில் நான் வாறன்" என்றபடி தனக்குப் பழகிய பாதையானதால் தடுமாற்றம் இன்றி வந்தார்.

"என்னடாப்பா இங்கே வெய்யில் எண்டாலும் நெருப்பு மாதிரி: இப்ப பாத்தியே ஐந்தாறு நாளா சோனாவாரி மழை. உங்கடை பக்கமும் காணியளுக்கை வெள்ளமோ" என்றபடி வீதியில் ஏறி இடுப்பில் இருந்த பேரனை இறக்கி விட்டார்.

"இல்லை அண்ணை: தண்ணி வடிஞ்சிருக்கும். நீங்கள் இப்ப....." என்று இழுக்க......" "குடுத்த கைக்கு குறைவில்லை செல்லையா: அவன் காணிக்காரன் தன்ரை கல்வீட்டிலை இரு எண்டு கொஞ்ச நஞ்சமே வில்லங்கப்படுத்தினவன். நானல்லோ தனிய இருப்பம் எண்டு கொட்டில் போட்டேன். நீ, நட பிள்ளை, தம்பி வாங்கோ எண்டு மகளையும் மருமகனையும் கிழப்ப வேறு வழியில்லை நானும் கிழம்பிவிட்டன். சாமான்கள் பிரச்சனை இல்லை, உனக்குத் தெரியும் தானே. ஒரு பானை, இரண்டு சட்டி, இரண்டு உடுப்புப் பையள் கையோடை கொண்டு போட்டம் எனச் சாதாரணமாகக் கூறினார்.

தற்போது அவர்கள் இருந்த வீடு நோக்கி நடக்கையில், "நான் அண்ணை கேட்கிறன் எண்டு கோவியாதையுங்கோ: எல்லோருமாய் யாழ்ப்பாணம் போனா, அங்கு இந்த வெள்ளப்பிரச்சினை இல்லை. அல்லாட்டி கொழும்பிலையாவது போயிரு க்கலாம் தானே...... முடிக்கவில்லை.

"எடை செல்லையா நீ, என்னப்பா சுயநினைவோடதான் இருக்கிறியோ: இல்லாட்டி..... எட இப்படி எத்தினை கஸ்ரம் இன்னும் வரட்டும். எல்லாம் மனந்தான்ராப்பா. நீ, குழம்பிப்போனாய். என்னைப்பற்றித் தெரியும் உனக்கு. முந்தி உதாலை போகாதை எண்டு சொன்ன ஆமிக்கு அடிச்சு, என்ரை றோட்டிலை நான் போவன் எண்டு சண்டை போட்டதும், அவங்கள் என்னை அடிச்சுத் துவைச்சுப்போட்டதும் தெரியும். அப்ப உடம்பு ஏலும். இப்ப ஏலாது." .

"ஓம் அண்ணை: உடம்பு ஏலாத நேரம் ஏன் கஸ்ரப்படுவான் எண்டுதான் நானும்...."

"நிற்பாட்டடாப்பா: இப்ப அங்கை யாழ்ப்பாணத்திலை இதாலை போகாதை, அதாலை போகாதை எண்டு நாளுக்கொரு சட்டம் போட்டு எங்கடை ஊரிலை எங்களை ஆளுறான் அவன். அங்கை போய் அவமானப்படச் சொல்லுறியோ? அல்லது முந்திமாதிரி சண்டை பிடிக்க, அவன் அடிச்சுக் கிளறித் தாக்க சாகச் சொல்லுறியோ. நான் போகமாட்டன். மருமோனும் தன்மானம் உள்ளவர். போகமாட்டார்" என்றார்.

நான் தைக்கு ஊர் போக இருந்த முடிவையும் அப்படியே என்னுள் விழுங்கி விட்டேன். பொன்னம்பல அண்ணரின் கூற்றுக்களினால் என்னுள்ளும் உறுதி பிறக்கத்தொடங்கி விட்டது. ✳




## சுதந்திர சூரியரே

உதயத்துச் சூரியரே இதயத்தால் போற்றுகின்றோம்
ஈன்றதாய் உன்னை ஈழத்துக்காய்த் தந்தாளா?
போகத்தில் போர் தொடுத்து தமிழ்மண் மீட்டவரே
யாகத்தில் நீர் எரிந்து தாயகத்தைக் காத்தவரே
அங்கம் அகன்றிருந்தும் அறப்போர் இட்டகதை
தங்கத் தமிழீழத் தலைவன் வழி நின்ற கதை
பொங்கும் அலை நடுவே புறப்பட்ட சோகக்கதை
என்றும் அகலாதையா எம்மிதையத் திரையைவிட்டு.

—வட்டூர் இரா ஜெயமோகன், நெதர்லாந்து.

## உரிமைப் போராட்டத்தல் உதிர்ந்தவர்கள்

உரிமைப் போராட்டத்தில் உதிர்ந்த பூக்களே!
உதிரத்தை உரமாக்கிய உத்தமர்களே!
கடற்புலியாய் சரித்திரம் படைத்த வீரர்களே!
ஆழ்கடலில் சொத்தான எங்கள் முத்துக்களே!
நாளைய பொழுது நமக்காய் புலரும்
புலரும் பொழுதில் தமிழீழம் மலரும்
மலரும் ஈழத்தல் சுதந்திரம் நிலவும்
நாளைய சந்ததி உம்புகழ் பாடும்.

—திருமதி ராஜேஸ்வரி லோகநாதன்

## நீண்டகாலம் நெஞ்சினில்

வங்கக் கடலில் வலம் வந்த
ஈழத்தாய் மைந்தர்களே
எம்முயிர் காக்க உங்கள் உயிர்களை
தியாகம் செய்த சீலர்களே
அன்னியன் அடாவடித்தனத்தால்
இழந்தோம் உங்களை
வங்கக் கடலுடன் சங்கமமாகிய நீங்கள்
நெஞ்சக்கடலில் நிலைத்திருப்பீர்கள்.

— மாமுனை மனோ, நோர்வே.



## விடிவெள்ளி

தலைவனின் வழியில் தமிழீழம் காண
கனவுடன் கடலினுள் படகினில் ஏறி
புயலெனப் போன புலி மறவரே
கயவரின் கரங்களில் பிடிபட மறுத்த நீவிர்
உயிரே போக்கி எரிதணலானீரே
உம்முடன் சேர்ந்த வேங்கைகளும்
விடுதலையடையும் தமிழீழ வானில்
விடிவெள்ளியாக ஒளி தருவீரே!

—செ. செல்வராஜா, யேர்மனி.

## நாம் இழந்த தங்கங்கள்

தலை வணங்கா தமிழ்புலிகள்—வீரம்தனை
தரணி தெரிய மீண்டும்மொருமுறை
நிருபித்த தலைவன் இதயமே கிட்டண்ணா
தைபிறந்தவேளை அந்த வங்கம்
புனிதம்பெற தங்கமேனி இழந்து
ஈழத்தில் உலாவரும் வீர நிலவுகளே
ஆர்பரிக்கும் அலையாக எம் ஈழமண்ணை
அணைத்து நிற்கும் உங்களுக்கு அஞ்சலிகள்!

—சுவீதா சிறிஸ்கந்தராஜா, யேர்மனி.

## மறைந்தும் மறையாதவர்கள்

மலர்ந்து மலராகி மனதில் புயல் ஆக்கி
மண் மீட்க புலியாகி வாழ்ந்த கதை சொல்லவா?
அண்ணல் காந்தி உருவான அகிம்சை வழிவந்த
அண்டை நாடு சதி செய்து மறைந்தகதை சொல்லவா?
மறைந்தும் மறையாத மக்கள் மனதில் நிலையான
நீண்ட கதை சொல்லவா?

—லதாங்கி, லண்டன்.

## தேடுகிறோம் தர்மத்தை....!

காற்றும் கூட அசைய மறுத்தது
கடலும் வானமும் குமறி அழுதன
கறை படிந்தது பாரதப் பண்பில்
கனத்தது தமிழர் எம் இதயங்கள்
தளபதி கிட்டுவும் ஒன்பதின்மரும்
தமிழ் நாட்டின் தவறால் தழுவினர் மரணம்
தர்மம் அன்று தலை குனிந்ததேன்? எங்கள்
தங்கத் தமிழரைத் தரணியில் பிரித்ததேன்?

—திருமதி சக்திதேவி சத்தியநாதன், யேர்மனி.

## இலட்சியத் திசைகள் விடிகின்றன

விடுதலையின் விருட்சங்கள் நீங்களாகி
இருபதாம் நூற்றாண்டின் தலைவன்—ஆம்
கொண்ட இலட்சியம் குன்றிடா எங்கள்
கொள்கை வீரனின் தம்பிகள் நீங்களாகி—தமிழின
விடுதலை வரலாற்றின் மூத்த புயல்களாகி
பாரதத்தின் கோரச் சதியால் பலியாகி—ஈழத்தின்
விடிவெள்ளிகள் உங்களால் எங்கள்
இலட்சியத் திசைகள் விடிகின்றன.

—துன்னாலையூர்க் குகதாசன், யேர்மனி.

## தீயணைப்போம்!

தமிழ் அகராதியில் நெருப்பு—தீ—நீங்கள்
தீயினை தீண்டினீர்கள்—விடுதலைத் தீயினை
தூண்டினீர்கள்
அன்று நீங்கள் மீட்டெடுத்த எங்கள் மண்ணில்
இன்று சிதைக்கப்பட்டது உங்கள் நினைவுச் சின்னங்கள்!
இரண்டாவது தடவையும் உங்களை இழந்து
நிற்கின்றோம்
உங்களை—தீயினை தொட்டணைத்து சூழுரைப்போம்!
வன்னியில் வழி தெரியாமல் நிற்கின்றான் எதிரி
வதிரிவரை வந்து வழி அனுப்புவோம்—இது உறுதி!

—அன்புத்தமிழன், நெதர்லாந்து.

## அனல் மூட்டிய வேங்கைகள்

தேசத் தலைவனையும்
பாசமிகு மக்களையும்
காணத்துடித்தவர்கள்....
தாயகம் திரும்புகையில்
அரக்கர்களின் சதியால்
தமக்கே தீயை மூட்டியவர்கள்
எங்கள் வீரவேங்கைள்....

—அன்னலிங்கம் அமிர்தா, பிரான்ஸ்.

## ஆக்கங்கள் அனுப்பியோர் அனைவருக்கும் நன்றி:

நெதர்லாந்து—ச. சாந்தி
யேர்மனி—திருமதி மனோரதி சரவணபவான்,
திரவியராசா பிரகாஷ், திருஷ்ஜா திருநாவுக்கரசு,
திருமதி ரஜனி பாலா, வரணியூர் கனகராசா, பூ.
சுபாங்கி, திருமதி செல்வி இலட்சனகுமார்
சுவிஸ்— புங்கையூர் த. மதி.
பிரான்ஸ்—தனம், துஸ்யந்தி சற்குணநாதன்.
ஏ. நி. இம்மானுவல், அமலா ஜெயந்தன்.

## ஜீவநதிகள்

நாட்டுக்காகப் போரிட்ட நீங்கள்
இன்று இங்கில்லை
இந்தியக்கடல் எல்லையிலே இடியாய்
வெடித்த வேங்கைகளே
ஈழக்கடலின் கரைமினிலே அலையாய்
மோதும் அண்ணன்களே
தமிழ் ஈழம் பிறக்கும் நாள்வரை
ஜீவநதியாய் வாழ்ந்திடுவீர்.

—சண்முகநாதன் பிரபாகர், யேர்மனி.

## சுயம் உரைத்தார்

எட்டுத்திக்குமாய் தமிழீழக்கதை சொன்ன
கிட்டண்ணாவை ஒரு பொட்டிலுள்ளடக்கி—இன்னும்
பொட்டினைச் சுற்றி சுதந்திரச் சிட்டுகளாக...
எட்டப்பருருவான இந்தியக் கூலிக் கிரையாகா
சுட்டிட்ட அக்கினியோடவிந்து சுடராகி—அந்நியம்
தொட்டிடா உயிர் துறந்து சுயம் உரைத்தவராய்....

—கோசல்யா சொர்ணலிங்கம், யேர்மனி.

# கறுப்பின மக்களின் விடுதலைப் போராட்டம்

– கரிகாலன் (தமிழீழம்)

ஆபிரிக்காவில் இருந்து அமெரிக்காவுக்குக் கொண்டுவரப்பட்ட கறுப்பின மக்கள், தமது உரிமைகளுக்காகவும் சலுகைகளுக்காகவும் குரல் கொடுக்கத் தொடங்கியபோது கறுப்பின மக்களின் விடுதலைப் போராட்டம் கருப்பெற்றது. அமெரிக்காவின் சனத்தொகையில் பத்து வீதத்தினைத் கொண்டிருந்த இம் மக்கள், 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அமெரிக்க அரசுக்கு எதிரான தமது விடுதலைப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

கறுப்பின மக்களின் குடியேற்றம், 1819ஆம் ஆண்டு முதன் முதலாக இருபது ஆபிரிக்கர்கள் வேர்ஜினியாவுக்குக் கொண்டுவரப்பட்டதுடன் ஆரம்பித்தது. அமெரிக்கப் பெருந் தோட்டப் பயிர்ச் செய்கைக்கு வேண்டிய ஊதியத்தை நிறைவுசெய்யும் பொருட்டு இவ் அடிமை இறக்குமதி அமெரிக்காவில் நிகழ்ந்தது. காலப்போக்கில் துரித கதியில் கறுப்பு இன மக்களின் எண்ணிக்கை அதிகரித்துவிட்டது. எனினும் இம்மக்களின் வாழ்க்கை அடிமை நிலையிலேயே இருந்தது. இவ் அடிமைகள் திட்டமிடப்பட்ட முறையில் ஒரு சாராரின் செல்வத் திரட்சிக்காகச் சுரண்டப்பட்டனர். சமூக நீதி இழந்தவர்களாக, சம அந்தஸ்த்து மறுக்கப்பட்டவர்களாக, வறியவர்களாக வாழ்ந்து வந்தனர். இவர்களால் வெள்ளையர்களின் நிற, இன வாதத்தில் இருந்து தப்பித்துக் கொள்ள முடியவில்லை. இவ்வாறான கால கட்டத்திலேயே கறுப்பின மக்களின் விடுதலைப் போராட்டம் அமெரிக்க அரசியலில், 'கறுப்பர் அதிகாரம்' எனச் சிறப்பு நிலைப்படுகிறது.

கறுப்பின மக்கள் உளவியல், அரசியல் ரீதியாக அடைந்த விரக்தியின் வெளிப்பாடாகவே கறுப்பர் அதிகாரம் காணப்படுகிறது. கறுப்பர் அதிகாரம் என்பது குடியியல் உரிமைக்கான இயக்கம் மட்டுமல்லாது, அநீதிக்கு எதிரான ஓர் இயக்கமும் ஆகும் எனக் குறிப்பிடுகின்றனர் நீக்ரோ மக்கள். ஆனால் 'கறுப்பர் அதிகாரம்' என்பதை, வெள்ளையின மக்கள் புதிய இனவாதத்தின்– நிறவாதத்தின் வடிவமாக நோக்குகின்றனர்.

1960களில் கறுப்பு இனத்தவரின் போராட்டம் மிகத் தீவிரமடைந்து காணப்பட்ட போதிலும் இந்நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே அதற்கான பாதை திறக்கப்பட்டது எனலாம். கறுப்பின மக்களின் தாயகமான ஆபிரிக்காவில் நடைபெற்ற சுதந்திரப் போராட்டத்தினால் தூண்டப்பட்ட அமெரிக்க கறுப்பின மக்கள், வெள்ளையினத்தவரின் அடக்கு முறைக்கு எதிராக விடுதலைப் போராட்டத்தில் குதித்தனர்.

1905ஆம் ஆண்டு டபிள்யூ. ஈ. பி. டுபொக்ஸ் ஜோல்ஹோன், மொன்றோய்ரொட்டர், கெலிமில்லர் முதலான புத்திஜீவிகளால் 'நீக்ரோ இயக்கம்' எனும் அமைப்பு நிறுவப்பட்டது. கறுப்பர் அதிகாரத்தை வளர்த்ததில் முன்னோடி இயக்கமாக இது விளங்கியது. இவ்வியக்கத்தின் ஸ்தாபகரில் ஒருவரான டுபொக்ஸ் என்பவர் எழுதிய, 'நீக்ரோ மக்களுடைய உயிர்' என்ற நூல் கறுப்பு இனத்தவரின் தேசியவாதத்தை வளர்த்து, அவர்களின் விடுதலைப் போராட்டத்தை உத்வேகப்படுத்தியது.

அமெரிக்காவில் காலத்துக்கு காலம் இடம்பெற்ற இனக்கலவரங்கள் 'கறுப்பர்– வெள்ளையர்' வேறுபாட்டினை மோசமாக்கியதுடன் மட்டுமன்றி, விடுதலைப் போராட்டம் ஒன்றின் அவசியத்தை கறுப்பினத்தவர்களுக்கு உணர்த்தியது. அந்த வகையில் 1906 இல் இடம்பெற்ற 'ஸ்பிறிங் பீல்ட் இலினோய்ஸ்' கலவரங்களைத் தொடர்ந்து, 1910ஆம் ஆண்டில் மக்களின் முன்னேற்றத்துக்கான, 'தேசிய சங்கம்' மூர்பிலேட் ஸ்ரோர் என்பவரால் ஸ்தாபிக்கப்பட்டது. இவ்வியக்கத்தின் தொழிற்பாடுகளை, நோக்கங்களை 'கிறிஸ்' என்ற அவர்களது சஞ்சிகை நாடு முழுவதும் வெளிப்படுத்தியது.

1915ஆம் ஆண்டில் கார்ட்டர்ரஜி, வூட்சன் என்பவர் நீக்ரோக்களுடைய வாழ்க்கை, வரலாறு பற்றிய 'கல்விக்கான சமரசம்' எனும் இயக்கத்தை நிறுவி போராட்டத்தில் கலந்துகொண்டார். அத்துடன் 'நீக்ரோக்களுடைய வரலாறு' எனும் சஞ்சிகையையும் வெளியிட்டார். அதன் தொடர்ச்சியாக மாகஸ்கார்வே என்பவர், 'சர்வதேச நீக்ரோக்களின் முன்னேற்றச் சங்கம்' (யூ. என். ஐ. ஏ) எனும் இயக்கத்தை ஆரம்பித்தார்.

1930ஆம் ஆண்டு டபிள்யூ. டிபாட் என்பவர் 'கறுப்பு முஸ்லிம் இயக்கம்' (வி.எம்.எம்) எனும் அமைப்பை ஆரம்பித்து, நீக்ரோக்களுக்குத் தனி இராச்சியம் அமைக்க வேண்டும் என போராட்டத்தில் இணைந்து கொண்டார். காலப்போக்கில் அதன் தலைவர்களிடம் ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாக, இவ்வியக்கம் சீர்குலைந்தது. இக்காலத்தில் யங், கொங்கேசு பவல் முதலான தலைவர்கள் பல இயக்கங்களை நிறுவினர்.

ஸ்ரொலி மைக்கில் தலைமையில் 'மாணவர் சாத்வீக இணைப்புக்குழு' (எஸ். என். சி. சி.) எனும் இயக்கமும் மாட்டின் லூதர் கிங் என்பவரின் தலைமையில் 'தெற்கு கிறிஸ்தவ தலைமைத்துவ கூட்டமைப்பு' (எஸ். சி. எல். சி) எனும் இயக்கமும் கறுப்பர் அதிகாரத்தைப் பயன்படுத்தி போராட்டத்தைத் தீவிரப்படுத்தியது.

1940ஐ அண்டிய காலப்பகுதியில் மார்ட்டின் லூதர் கிங்கினுடைய தலைமையின் கீழ் சாத்வீகப் போராட்டம் திட்டமிடப்பட்ட முறையில் முன் எடுக்கப்பட்டது. எனினும் இக் காலப்பகுதியில் தோற்றம் பெற்ற பெரும்பாலான இயக்கங்கள் மத, பிரதேச அடிப்படையில் இயங்கினவே அன்றி, தேசிய அடிப்படையில் நீக்ரோ மக்களின் சுதந்திர உரிமைகளுக்குக் குரல் கொடுக்கக்கூடிய சக்திவாய்ந்த இயக்கங்கள் எதுவும் காணப்படவில்லை.

1965ஆம் ஆண்டளவில் பெரும்பாலான கறுப்பின இளைஞர்கள் தமது உரிமைகளுக்காக ஆயுதம் ஏந்திப் போராடுவதே ஒரே வழியென உணர்ந்தவராய் ஆயுதங்கள் ஏந்தினர். ஆயுதப் போராட்டத்தை 1966இல் நிறுவப்பட்ட 'பிளேக் பானர் பாட்டி' முன்னெடுத்து இருப்பினும், முழுமையான, பாரிய அளவிலான திட்டமிடப்பட்ட ஓர் ஆயுதப் போராட்டத்தை இவ் இயக்கம் முன்னெடுத்தது என்று கூறிவிட முடியாது.

அமெரிக்க கறுப்பு இனத்தவரின் போராட்டத்தினை, அமெரிக்க தேசிய அரசு தனது அடக்குமுறைக் கருவிகள் மூலம் பெரிதும் நசுக்க முனைந்தது. இக்காலகட்டத்தில் 'ரேஸ்மோட் லோகான்' என்பவர் 'நீக்ரோ மக்களுக்கான நம்பிக்கைத் துரோகம்' என்ற தனது நூலில், நீக்ரோக்களின் எதிர்பார்ப்புக்கள் துரோகம் செய்யப்பட்டதாகவும் அவர்கள் இரண்டாம் தரப் பிரஜைகளாக்கப்பட்டதாகவும் அமெரிக்காவில் காணப்படும் ஜனநாயகம் என்பது, தனியே வெள்ளையர்களுக்கு மட்டுமே சொந்தமானதுபோல் காணப்படுகிறது என்றும் குறிப்பிடுகின்றார்.

**கறுப்பு இனத்தவர்களின் நீண்டகால விடுதலைப் போராட்டம் காரணமாக, அமெரிக்க அரசு அவர்களுக்குச் சில உரிமைகளை வழங்கியது. கல்விச்சமத்துவம், நிர்வாக சுதந்திரம், வீட்டுரிமை போன்றவை இந்த வகையில் அடங்கும். இவ்வாறு பல்வேறுபட்ட அடிப்படையில் அமெரிக்க அரசியலில் வழங்கப்பட்ட சலுகைகள், அவர்களது விடுதலைப் போராட்டத்தை தளர்வடையச் செய்துவிட்டன.**

கறுப்பு இனத்தவர்களின் நீண்டகால விடுதலைப் போராட்டம் காரணமாக, அமெரிக்க அரசு அவர்களுக்குச் சில உரிமைகளை வழங்கியது. கல்விச்சமத்துவம், நிர்வாக சுதந்திரம், வீட்டுரிமை போன்றவை இந்த வகையில் அடங்கும். இவ்வாறு பல்வேறுபட்ட அடிப்படையில் அமெரிக்க அரசியலில் வழங்கப்பட்ட சலுகைகள், அவர்களது விடுதலைப் போராட்டத்தை தளர்வடையச் செய்துவிட்டன.

அமெரிக்காவிலும் கறுப்பு இனத்தவர்களின் வாக்குரிமை தாக்கம் செலுத்திய நிலையில் அமெரிக்க ஜனாதிபதியான கெனடி போன்றோரின் தேர்தல் வெற்றியை கறுப்பு இனத்தவரே தீர்மானித்தனர். இதனால் ஏற்பட்ட அமெரிக்க அரசின் அரசியல் சலுகைகளால் 1970ஆம் ஆண்டுகளைக் கடந்த நிலையில் கறுப்பர்களின் போராட்டம் பின்னடைந்தது. அதற்குப் பல காரணங்களைக் கருத்தில் கொள்ளலாம்.

கறுப்பர்களின் போராட்டத்தினை உற்று நோக்கினால், அது ஆரம்பத்தில் இருந்தே பிளவுபட்டு இருந்தமை, தமக்கென அங்கீகரிக்கப்பட்ட பலம் வாய்ந்த அரசியல் கட்சியை தேசிய ரீதியில் உருவாக்காமை, மத– பிரதேச அடிப்படையில் பல கட்சிகளாகப் பிரிந்து செயற்பட்டமை, தலைமைத்துவத்துக்கான அதிகாரப் போட்டி மனப்பான்மை, திட்டவட்டமான கட்டுக்கோப்பைக் கொண்டிருக்காமை, கறுப்பர்களின் மத்தியில் காணப்பட்ட தாழ்வுணர்வு போன்றமை விடுதலைப் போராட்டத்தினைத் தடைசெய்த காரணிகளாகக் கொள்ளமுடியும்.

************


# கேணல் கிட்டு

## மற்றும் ஒன்பது தோழர்களினதும் 5ம் ஆண்டு நீங்காத நினைவு

## எழுச்சி மாலை

நெஞ்சமதில்
விடுதலைத்தீ ஏந்தி
நின்றவர் - தலைவன்
கனவுகளின் உருவெடுத்து
களங்கள் வென்றவர்
இரக்கமற்ற கொடியவரின்
நினைவறிந்தவர் வந்த
கப்பலோடு தாம் எரிந்து
மானம் காத்தவர்.

தளபதி கிட்டுவும், மற்றும் ஒன்பது வீரமறவர்களும் வீரச்சாவடைந்து ஐந்து ஆண்டுகள் ஆகிவிட்டன. அவர்கள் நினைவுடன் அவர்கள் தாங்கி நின்ற இலட்சியக் கனவை நிறைவேற்றுவோம் என உறுதியெடுத்து, எழுச்சி கொள்வோம் வாருங்கள் !!

**18 . 01 . 1998**
**ஞாயிறு மாலை**
**5.30 மணி**

**AMORC**
**199 Bis Rue St. Martin**
**7500 Paris**

மேலதிக தொடர்புகட்கு : 01 43 58 11 42

# தளபதி கிட்டுவினதும் தோழர்களினதும் ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்





## கிட்டண்ணா உபதேசம் !!!

யன்னலைத் திறந்துவை! கதவையல்ல!

இது கிட்டண்ணை சொன்னது.
ஆயிரம் தத்துவம் இளையோடி நிற்கின்ற
கிட்டண்ணா உபதேசம்.

மனதுக்குள்
புளுக்கம் அழுக்கு
இன்னபிற முடைநாற்றம்.
கூனிக்குறுகி குமைகின்ற மனிதா..!

உன் யன்னலைத் திறந்துவை!

காற்று வரட்டும்.
வாட்டும் கொடிய துர்நாற்றம் விலக...
புதிதாகச் சுவாசிக்க...
யன்னலைத் திறந்துவை.
புதிய சுகந்தம்.... பரிசுத்தமான காற்று
மூச்சுமுட்ட இழுந்து
உவகை கொள்வாய்.
நோய் நொடி விலகும்
புதிய எழுச்சிப் பிரவாகம் தெரியும்.
புத்தெழில் பெற உன் யன்னலைத் திறப்பாய்!





உன்னுள் இருக்கின்ற அழுக்குகள் மறைய உலகத்தைப் பார்ப்பாய்.
கண்ணைக் கவரும் காட்சிகள் காண்பாய்.
நல்லவை தீயவை
உன்னைச் சுற்றி நடக்கின்ற யாவையும்
கண்கள் பார்க்க...
யன்னலைத் திறந்துவை!

நீயறியாத பலவித அனுபவம் காண்பாய்.
பூக்கள் மலர்ந்து சிரிக்கும்
வண்டுகள் பாடித் தேனைக்குடிக்கும்.
பறவைகள் சந்தோசக் கனவில் மிதக்கும்
எல்லையில்லா இன்பச் சூழல் உன்முன்னால் தெரியும்.

துயரம் மிகுந்த மனிதரைக் காண்பாய்.
வாழ்க்கை சுமையை சுமக்கமுடியா வறியவர் கொடுமையைப் பார்ப்பாய்.
நோய்நொடி வாட்ட தவிக்கின்ற மக்களின் அவலம் உணர்வாய்.
உலகத்தின் மறுபுறம் இப்படியிருக்கும்.





உலகம் இப்படி.
உலக மனிதரின் இயல்பும் இயக்கமும் இப்படி.

எது? எப்படி?
அறிந்துகொள்ள யாவையும் உள்வாங்க...
யன்னலைத் திறந்துவை!

புதிய காற்று!
உன்யன்னலை கடந்து வேகமாய் புகும்.
வேகம் தாளாமல் நீ தள்ளாடக்கூடும்.
அதுவும் சாத்தியம்.

உன்னை அள்ளிச் செல்ல காற்றுக்கு அனுமதிக்காதே!
அதனால்....

யன்னலைத் திறந்துவை! கதவையல்ல!!

– ஜெயா –







